நவநீதம்

(நாவல்)

'எல்லார்வி'

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை—18.

உரிமை பதிவு] 1951 [விலை ரு. 1–8–0

அமுதம்-12
முதற் பதிப்பு-மார்ச்சு-1951

நேஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை-18

சமர்ப்பணம்

என் அருமைச் சகோதரிக்கு

பொருள் அடக்கம்

பதிப்புரை

"தமிழில் நாவல்கள் இல்லை; எல்லாம் ஹிந்தியிலிருந்தும் வங்காளியிலிருந்தும் மொழிபெயர்த்தவைகளே" என்று குறை கூறின காலம் ஒன்று தமிழ்நாட்டில் இருந்தது. ஆனால் இப்போதோ, "தமிழில் எதற்காக இத்தனை நாவல்கள் எழுதுகிறார்கள்? ஏதோ கன்னா பின்னாவென்று கிறுக்கித் தள்ளி, இடை இடையே காமுகர்களை ரஸமற்ற முறையில் நடிக்கச் செய்த பண்டங்களை நாவல்களென்று போடுகிறார்களே! இந்த முயற்சி எதற்கு?" என்று கேட்கும் நிலை வந்துவிட்டது.

நாவல் எழுதும் கலை எளிதில் கைவரப் பெறுவதன்று. வாழ்க்கையின் பரப்பையும் ஆழத்தையும் உணர வேண்டும். அந்தப் பரப்பினூடே மக்கள் பலரும் இடங்களும் பொருள்களும் தங்கள் நிறம் மாறாதபடி காட்சி அளிக்கும். மக்களின் உள்ளப் போக்கையும் இன்ப துன்ப எழுச்சிகளையும் தெரிந்து கொண்டவர்களும், வாழ்க்கையின் ஆழத்தைத் தெரிந்துகொண்டவர்களும் நாவல் எழுதும் ஆற்றல் உள்ளவர்கள். இந்த இரு வேறு பகுதியும் சேர்ந்தே உயர்தர நாவல்களை ஆக்குகின்றன. ஆசிரியன் பாத்திரங்களோடு இழைந்து அநுபவித்து வாழவேண்டும் அப்போதுதான் வாசகர்களும் நாவல் என்பதை மறந்து பாத்திரங்களோடு உலவுவார்கள். வாழ்க்கையை ரஸிக்காத எழுத்தாளனுக்கு, வாழ்க்கையின் பல முகங்களையும் தனி நின்று தொடர்பின்றிக் காணமுடியாத எழுத்தாளனுக்கு, இலக்கிய சிருஷ்டியில் சுவையேற்ற முடியாது.

நாவல்கள் வருகின்றன; உடனே மறைகின்றன சில; சிலநாள் நிற்கின்றன சில; பலகாலம் நிற்பன மிகமிகச் சிலவே. அப்படிக் காலத்தின் எதிரே நிற்கும் நாவல்கள்! நாவல்கள் அல்ல; காவியங்கள். அவை வசனமாக இருந்தாலும், கவிச்சுவைப் பிழம்பான காவியங்களுக்குச் சமானமானவை.

தமிழ்நாட்டில் பழங்காலத்தில் சில 'சரித்திரங்கள்' நாவல்களாக உலவின. பிறகு துப்பறியும் கதைகள் வந்தன. இப்போதுதான் நல்ல நாவல்களாக எழுதவேண்டுமென்ற முயற்சி எழுந்திருக்கிறது. சிறுகதைகள் அபரிமிதமாக வந்ததன் விளைவாக நாவல்கள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையிலும் தொடர் நாவல்கள் வருகின்றன. இது நல்ல காலத்துக்கு அறிகுறிதான். ஆனாலும் உயர்தரமான நாவல்கள் மிகமிக அருமையாகவே வருகின்றன. நாளடைவில் வெளி வரும் என்றே தோன்றுகிறது.

ஸ்ரீ 'எல்லார்வி' சிறுகதை யுலகத்தில் ஓர் இடம் பிடித்துக் கொண்டவர். நாவல் உலகத்தை எட்டிப் பார்க்கிறார். இதோ இந்தக் குட்டி நாவல் அவருடைய முயற்சியில் ஒன்று. இந்த நாவலின் லட்சியம் உயர்ந்தது. இசையை மனிதனுக்கு அடிமையாக்காமல் ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்க வேண்டும் என்ற உன்னதமான லட்சியம் கதையைப் படித்து முடித்ததும் நெஞ்சில் மணக்கிறது. கதையில் ஓட்டம் இருக்கிறது. பாத்திரங்களுக்கு உருவம் நன்றாக அமைந்திருக்கிறது. இனி இவருடைய பெரிய நாவல்களால் தமிழுலகம் இன்பம் அடையுங் காலம் வருமென்றே நம்புகிறோம்.

— பதிப்பாளர்

முகவுரை

'ஆண் பார்த்ததைக் கை செய்யும்'—தம்முடைய குழந்தைகளைப் பற்றிச் சிலர் இப்படிப் புகழ்ந்துகொள்வது உண்டு. இது உண்மையாகவும் இருக்கலாம்; வெறும் புகழ்ச்சியாகவும் இருக்கலாம். ஆனால் தேர்ந்த ஓவியன் விஷயத்திலே இந்த வார்த்தைகள் மிகப் பொருந்தும். அவன் இந்த வாக்கியங்களை மெய்ப்பித்து விடுகிறான். பார்த்ததை மட்டும் அல்ல; பார்க்காததையும் கூட அவன் கை உருவாக்கி விடுகிறது.

இந்த வகையில் ஓவியனோடு போட்டி போடுகிறான் கதாசிரியன். பார்த்தவை பார்க்காதவை, கேட்டவை கேட்காதவை, அநுபவித்தவை அநுபவியாதவை ஆகிய அனைத்தையும் தனது கற்பனைத் திறனால் உருவாக்கிவிடுகிறான் அவன். ஒவ்வோர் அம்சத்தையும் தனித்தனியேயும், சேர்த்தும் எழுத்துருவிலே வடித்து வாசகர்களின் முன் சமர்ப்பிக்கிறான். அவற்றின் தரத்தைப் பற்றின தீர்ப்பு ரசிகர்களின் வசமாகிறது. உலகம் பலவிதம். ரசிகர்களின் அபிப்பிராயங்களும் அப்படித்தான். அதற்காக—ஒன்றை உருவாக்கி வெளியிட்டபின் அதைப்பற்றி அதன் சிருஷ்டிகர்த்தா கவலைப் படுவதில் பயன் இல்லை. எதையும் சந்தோஷத்துடன் வரவேற்க வேண்டியதுதான்.

ஆனால் ஒவ்வொருவருக்கும் ஆத்ம திருப்தி என்று ஒன்று உண்டு. ரசிகர்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களில் காணாததை ஆத்ம திருப்தியிலே காணலாம். ஆத்ம திருப்திக்குப் பிறகுதான் அனைத்தும்.

நான் இதுவரையில் அநேகம் சிறுகதைகளும் பல நெடுங்கதைகளும் சில நாவல்களும் எழுதியுள்ளேன். நவநீதம் நாவல் என்ற மகுடத்தைப் பெற்றாலும் நெடுங்கதை என்று கூறுவதே மிகப் பொருந்தும். இந்த நெடுங்கதையிலே நான் ஆத்ம திருப்தியை அடைகிறேன்.

சிதம்மாள் எங்கோ பிறந்தாள்; எங்கோ வளர்ந்தாள். வாழ்விலே பல இன்னல்களை அநுபவித்தாள். குமுறிய உள்ளத்திலே எழுந்த உணர்ச்சி வார்த்தைகளாக வெளிவந்தது. ஒரு சபதத்தைச் செய்தாள். அதை நிறைவேற்ற எவ்வளவோ பாடுபட்டாள். கடைசியில் தன் சபதம் நிறைவேறாமலே மடிந்து போனாள்.

மார்க்க சகாயம் ஒரு தனி மரம். உலக வாழ்வு முடிவுறும் பிராயத்தை எட்டியவர். வள்ளியும் சிதம்மாளும் அவர் வாழ்விலே குறுக்கிட்டு ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார்கள். சிதம்மாளின் கனவு நனவாக அவரும் பாடு பட்டார். அவர் முடிவும் சிதம்மாள் முடிவைப்போல்தான் ஆயிற்று.

வள்ளி ஓர் அலாதிப் பிறவி. வெள்ளை உள்ளம் படைத்த அவள், 'உலகம் நல்லது; வாழ்விலே எதுவும் எளிது' என்று நினைக்கிறாள்; உலகைத் தன் வயமாக்க முயல்கிறாள். ஏமாறுகிறாள். தோல்வியுறுகிறாள். தாயின் சங்கற்பமும், தாய்க்கு அவள் அந்திய காலத்திலே கொடுத்த வாக்குறுதியும், வாழ்க்கையிலே கண்ட அநுபவங்களும் அவளது மென்மையான உள்ளத்தைக் கடினமாக்குகின்றன. துறவு பூணுகிறாள். எதிர்பாராத வகையில் அவளது லட்சியம்—அவள் தாயின் சபதம்—நிறைவேறுகிறது. வாழ்வைச் சுவைத்துப் பார்க்காத குறை லட்சியம் பூர்த்தி பெற்ற நிறைவிலே மறைந்துபோய் விடுகிறது. அவள் உள்ளம் சாந்தியைப் பெறுகிறது.

இதுதான் கதை. விசேஷமான சம்பவங்களோ, பிரமாதமான வருணனைகளோ, விசித்திரமான சொல் அடுக்குகளோ இதில் இல்லை. ஆனாலும் இயற்கையோடு ஒட்டினாற்போல, பாத்திரங்களோடு சேர்ந்து அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ளும் முறையிலே கதை அமைந்திருப்பதாக என் நினைவு.

இன்று நம் நாட்டிலே வள்ளியைப் போல எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவளைப் போல லட்சியத்திற்காகப் பாடுபடாவிட்டாலும் இசைக்காகவும் ஜீவனத்திற்காகவும் பாடுபடுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் ஆரம்பம், நடப்பு, முடிவு அனைத்தும் வள்ளியின் வாழ்க்கையை ஒத்தனவாக இல்லாவிட்டாலும் எங்காவது ஓரிடத்திலே சிறிதாவது சம்பந்தம் இருக்கலாம். அப்படிப்பட்ட எவராவது எப்பொழுதாவது நவநீதத்தைப் படிக்க நேர்ந்து முற்றும் படித்து முடித்து எந்த வகையிலோ உணர்ச்சி வசமாகி ஒரு பெரு மூச்சு விட்டால் போதும்; அதுவே என் ஆத்ம திருப்தி.

இந்தக் கதை எம். ஏ. மாகசைன் என்ற பத்திரிகையில் தொடர்ந்து வெளியானது. அப்போது அதில் பணியாற்றிவந்த நண்பர் ஸ்ரீ. த. ரா. ரா. அவர்களுக்கு எனது நன்றி.

எந்த ஒன்றையும் அன்போடு, முறையோடு செய்தால்தான் சோபிக்கும். அந்த முறையில் அமுதநிலையம் இந்த நாவலைச் சிறப்புடன் வெளியிட்டிருப்பது குறித்துப் பெரு மகிழ்ச்சி. அமுதநிலையத்தாரின் அன்புக்கும் ஆதரவுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்கள்.

மயிலை
20—3—51

—எல்லார்வி

நவநீதம்

1. கச்சேரி

"ஸரஸ ஸாம தான பேத தண்ட சதுர" என்ற கீர்த்தனையைப் பாடகி பாட ஆரம்பித்ததும் சபையோர், "ஆஹா! ஆஹா!" என்று ஆர்ப்பரித்தனர். சுருதியுடன் இழைந்து மதுரமாக ஒலிக்கும் அந்தச் சாரீரத்தின் மோகன சக்திக்கு இந்த ஈரேழு உலகமும் இணையாகாது என்று ஏக மனசாக எல்லோரும் எண்ணினதில் தவறு எதுவும் இல்லை.

நீலாயதாட்சிக்கு அப்போது வயசு இருபதுதான் இருக்கும். நிகரற்ற அழகு. கணீர் என்ற சாரீரம். அடக்கமான குணம். ஜிலுஜிலுவென்ற அவளது சாரீரத்திலே தோன்றும் விதவிதமான வர்ண ஜாலங்களோ வர்ணிப்பில் அடங்கா. உலகப் பிரசித்திபெற்ற குருவிடம் ஒழுங்கான முறையில் தேர்ந்த அப்பியாசம். அரங்கில் வந்த அன்றே அபாரமான புகழ். அப்படிப்பட்டவள் இன்று சிக்கலில் சிங்கார வடிவேலனின் சந்நிதியில் பக்தியோடு உள்ளம் உருகிப் பாடும்போது அந்தச் சங்கீதம் எத்தன்மையதாகத்தான் இருக்கும்? ஜனங்கள் தம்மை மறந்த நிலையில் அதை அநுபவித்ததிலே வியப்பென்ன?

மக்களின் மகிழ்ச்சி அதிகரிக்க அதிகரிக்கப் பாடகி யின் உற்சாகமும் எல்லையைக் கடந்தது. கடல் மடை திறந்தாற்போலக் கான மழை பொழிந்தாள். மாலை ஐந்து மணிக்கு ஆரம்பித்த கச்சேரி இரவு பத்து மணியாகியும் பூர்த்தி பெறவில்லை. யாருக்காவது மனச்சலிப்போ, சரீர அசதியோ, வேறு ஏதாவது அவசியமோ ஏற்பட்டால் அல்லவோ கச்சேரியின் முடிவைப் பற்றி எண்ணமிடுவார் கள்? அவள் ஆவேசம் வந்தவள்போலப் பாடினுள். பக்க வாத்தியக்காரர்கள் மிகுந்த குதூகலத்துடன் ஒத்துழைத் தனர். சபையோர் பதுமைகளைப் போன்று சமைந்திருந் தார்கள்.

அதோ! ஒரு மூலையில் கருங்கல் தூணுக்கருகில் உட் கார்ந்திருக்கும் உருவத்தைக் கவனியுங்கள். வயது சற்றே றக்குறைய நாற்பது இருக்கலாம். ஆனுல் அந்த வயதிற் குரிய தோற்றம் இல்லை. போஷிப்புக் குறைவாலும், மனே வியாகூலத்தாலும் ஐம்பது வயதுக் கிழவி போன்ற தோற் றம். கிழிந்த ஆடைகள், பறக்கும் கேசம், கறுத்த மேனி, விரக்தியைத் தோற்றுவிக்கும் கண்கள்; மொத்தத்தில் பயங் கரமான ஓர் உருவந்தான் அது. அவள் பெயர் சீதம்மாள்.

அவள் அருகில் கந்தல் துணியில் படுத்துக் கண் ணுறங்கும் மூன்று வயதுப் பெண் குழந்தை அவளு டையதுதான். ஆனுல் அதை யாரும் எளிதில் நம்பமாட் டார்கள். தாய்க்கும் சேய்க்கும் அத்தனை தாரதம்மியம். குழந்தை லட்சணமாக இருப்பதற்குக் காரணம் அதன் ஜனன கால விசேஷம் என்றனர் சிலர். தகப்பன் வழி என்றனர் சிலர். சீதம்மாளைக் கேட்டால் வேலனின் அருள் என்பாள். அவளுடைய சகலமும் அது; அந்தக் குழந்தைதான்.

கச்சேரி ஆரம்பித்தது முதல் சீதம்மாள் அங்கேதான் உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு ராகம் தெரியாது; தாளம் தெரியாது; பாடல்களின் பெயர் தெரியாது; ஒன்றுமே தெரியாது. ஆனால் அவள் ஒரு ரசிகை. 'சங்கீதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத அவள் எதற்காக இடுப்பொடிய மணிக்கணக்கில் அங்கே உட்கார்ந்திருக்க வேண்டும், அதுவும் இருள் படிந்த இடுக்கில் அந்தச் சிசுவையும் கிடத்திக் கொண்டு?' என்றால் அதற்குத் தக்க காரணம் இல்லாமற் போகவில்லை.

முதலாவது அவளுக்குத் தெய்வ பக்தி அதிகம். குறிப்பாக முருகனிடம் அளவுகடந்த பக்தி. நீலாய தாட்சி பெரும்பாலும் முருகனையே பாடுகிறாள். இரண்டாவதாக, சங்கீத ஞானம் லவலேசமும் இல்லையே தவிர அதனிடம் ஓர் அலாதிப் பிரமை உண்டு. மூன்றாவதாக (இதுதான் காரணங்களில் முக்கியமானது) அவளது சபதம்—தீவிர சங்கற்பம்!

இம் மூன்று காரணங்களாலும் ஆலயங்களிலும், சங்கீதம் நிகழும் இடங்களிலுமே பொழுதின் பெரும் பகுதியையும் செலவிட்டுவரும் அவள் இன்று இந்தப் புஷ்ய மண்டபத்திலே ஒரு பிம்பம்போல உட்கார்ந்திருந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

இரவு பதினொரு மணிக்கு ஒருவாறு கச்சேரி பூர்த்தி பெற்றது. பெருத்த ஆரவாரத்துடன் ஜனங்கள் கலைந்து சென்றனர். கூட்டத்திலே அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப் படக்கூடாதென்ற உத்தேசத்தினாலும், சுவாமி புறப்பாட்டைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்கிற அவாவினாலும் சீதம்மாள் மட்டும் இருந்த இடத்தை விட்டு

அகலாமல் உட்கார்ந்திருந்தாள். ஜனங்கள் யாவரும் போய், நீலாயதாட்சி அவளது கோஷ்டியினர் முதலியவர்களும் சென்று, அந்த இடம் சூன்யமான பிறகும் சீதம்மாள் அங்கேதான் இருந்தாள். அவளைப் பொறுத்த வரையில் வீடும் வெளியும் ஒன்றுதான். எங்கிருந்தால் என்ன?

"யார் அங்கே?"

இது கோயில் மணியகாரரின் குரல். ஏதோ காரியமாக அந்தப்பக்கம் போன அவர் இருட்டில் அசைப்பிலே சீதம்மாளின் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டு அப்படி அதட்டிக் கேட்டார்.

"நான்தானுங்க" என்று வறண்ட தொண்டையால் பதிலளித்தாள் சீதம்மாள். அவள் நெஞ்சு உலர்ந்து போயிருந்தது.

"நான்தான்னா?" என்று கேட்ட வண்ணம் கையில் இருந்த டார்ச்சு விளக்கைப் பொருத்திப் பார்த்துக் கொண்டே அருகில் சென்ற மணியகாரர், "ஓ! நீயா? ஏன் இந்த இருட்டிலே, பனிச்சாரல்லே புள்ளையையும் போட்டுக்கிட்டுக் குந்தியிருக்கே? பூச்சி பொட்டு ஏதாச்சும் வந்தா?........ஏன் கண்ணுலே தண்ணி வருது? அழுதையா?" என்று பரிவோடு கேட்டார்.

மரியாதையுடன் எழுந்து நின்ற சீதம்மாள் மறுபுறம் முகத்தைத் திருப்பி முன்றானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். ஆனாலும் அழுகை மூண்டு வரத்தான் செய்தது. அவள் சமாளித்துக்கொள்ள முயன்றாள்.

"நீ ஒரு பைத்தியம். வீணுக்கெல்லாம் என்னத்தையோ நினைச்சு அழுதழுது உடம்பைக் கெடுத்துக்கறே...."

"சாமி பொறப்பாட்டைப் பாத்துட்டுப் போவலாம்னு. ரொம்ப நேரம் ஆவுமா?"

"நேரந்தான் ஆவும். ஆளுங்களே இன்னம் வந்து சேர்ந்தபாடில்லே. அது ரெண்டு மணிக்கு மேலே ஆவும். நீ அதுவரைக்கும் எதுக்கு இங்கே கொட்டுக் கொட்டுன்னு குந்தி இருக்கணும்? சாமி வீதியிலே வாரப்போ பாத்துக்கலாம். பேசாமே ஊட்டுக்குப் போ."

"சரி" என்று புறப்பட்டாள் சீதம்மாள். குழந்தையை மெல்லத் தூக்கித் தோளில் சார்த்திக் கொண்டாள். அதன் முகத்தை உற்றுப் பார்த்தார் மணியகாரர். அயர்ந்த நித்திரையில் அந்த முகத்திலே நிம்மதி நிலவி இருந்தது. அதைக் கண்டு அவர் முகம் மலர்ந்தது.

"அசந்த தூக்கம் போல இருக்கு, தங்கச்சிக்கு" என்று சொல்லிக்கொண்டே அதன் கன்னத்தை லேசாக வருடினார். பிறகு எதையோ நினைத்துக்கொண்டவர்போல, "ரவை நேரம் இரு, வாரேன்" என்று கூறி வேகமாகச் சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "இந்தா, இதை எடுத்துக்கிட்டுப் போ" என்று ஒரு சிறு பொட்டணத்தை அவளிடம் நீட்டினார். 'கம கம' வென்ற வாசனையே அதில் என்ன இருக்கிறதென்பதை அறிவித்தது. அதைப் பெற்றுக் கொண்ட சீதம்மாள், "நான் வாரேனுங்க" என்று நடந்தாள். கூடவே சென்ற மணியகாரர், "பனி, சாக்ரதை!" என்று கூறி அவளை வழியனுப்பி விட்டுத் தாம் நின்றுகொண்டார்.

இருள் நிறைந்த அந்த இடத்தினின்றும் வெளிப்பட்ட சீதம்மாள் மெல்ல நடந்து அலங்கார மண்டபத்தை அடைந்தாள். அங்கே ஆடைகளாலும், ஆபரணங்களாலும்,

ஏராளமான மலர்களாலும் மிகச் சிறப்பாய் அலங்கரிக்கப் பட்டு, வள்ளி தேவசேனு சமேதராகக் காட்சியளித்துக் கொண்டிருந்த முருகப் பெருமானின் அருள் முகத்தைக் கண்டதும் அவள் உள்ளம் நெகிழ்ந்தது. அந்த வதனத் திலே தவழ்ந்த புன்னகை அவள் முகத்திலும் புன்முறு வலை உண்டு பண்ணிற்று. பக்தி பரவசமான அவள் ஆண்ட வனின் சந்நிதியிலே குழந்தையைக் கிடத்திப் பிரசாத மூட்டையையும் ஒரு புறமாக வைத்துவிட்டுச் சுவாமியை விழுந்து விழுந்து நமஸ்கரித்தாள். எழுந்து நின்று கந்த னின் கருணை நிரம்பிய முகத்தைப் பார்த்தாள். கண்ணீர் பார்வையை மறைத்தது. கண்களைத் துடைத்துக் கொண் டாள். உதடுகள் துடித்தன. கைகளை அகல விரித்து ஏதேதோ முணுமுணுத்தாள். சிறிது நேரத்திற்குப் பின் அப்படியே, நின்ற நிலையிலேயே தியானத்தில் ஆழ்ந்தாள்.

தன்னையும் உலகையும் மறந்த அந்த நிலையிலே அவள் இரவு முழுவதும் கூட இருந்துவிடுவாள். ஆனுல் அதற்குள் கீழே கிடந்த குழந்தை குளிர் தாங்காமல் நெளிந்து கொடுக்கும்போது, அதன் கால் அவள் காலிலே பட, அவளது பிரார்த்தனை கலைந்தது. ‘பளீர்! பளீர்!’ என்று கன்னத்தில் அறைந்துகொண்டு, “என்னப்பா! சிங்கார வடிவேலா! உன்னைத்தான் நம்பியிருக்கேன். நீதான் என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யணும்....” என்று கூறிக் கும்பிட்டுவிட்டு, மெதுவாகக் குழந்தையை எடுக் கப் போனுள். அதற்குள் ஏதோ நினைத்துக்கொண்டு மறுபடியும் சுவாமியை நோக்கிக் கும்பிட்டு, நமஸ்கரித்து எழுந்து நின்று தாடையில் போட்டுக் கொண்டாள். அவள் செய்கைகள் ஒரு பைத்தியத்தின் செயல்களே போன் றிருந்தன.

வீட்டை அடைந்த சீதம்மாள் பாயைப் போட்டுக் குழந்தையை அதில் படுக்கவைத்துவிட்டுக் கை கால் கழுவிப் பக்தியோடு, மணியகாரர் கொடுத்த பிரசாதத்தை உட்கொள்ளத் தொடங்கினாள். குழந்தைக்குக் கொடுக்காமல் சாப்பிட மனம் வரவில்லை. அதன் தூக்கத்தைக் கலைக்கவும் மனம் இல்லை. அகாலத்தில் ஆகாரம் கொடுக்கவும் இஷ்டம் இல்லை. குழந்தையின் ஆரோக்கியத்திலே அத்தனை கருத்து! ஆனாலும் மனம் கொள்ளாமல் மெள்ளக் குழந்தையை எழுப்பினாள். சிறிது சர்க்கரைப் பொங்கலை ஊட்டினாள். தூக்கக் கலக்கத்தில் அதைச் சுவைத்த குழந்தை நன்றாக விழித்துக் கொண்டு, "என்ன அம்மா?" என்றது.

"சர்க்கரைப் பொங்கல்டா கண்ணு!"

"ஏது?"

"கோவில்லேருந்து கொண்டு வந்தேன்."

"சாமி குடுத்திச்சா?"

"ஆமாண்டா ராஜா."

"அது என்ன?"

"வடை, இந்தா."

"அதோ, அது?"

"அது தயிர் சாதம். உனக்கு வாணும்."

"ஏம்மா?"

"பனி நேரத்திலே சாப்பிட்டால் சளி புடிச்சுக்கும்."

இன்னும் இரண்டு வாய்ச் சர்க்கரைப் பொங்கலைக் கொடுத்தாள் சீதம்மாள். குழந்தைக்கு மறுபடியும் தூக்கம் கண்ணைச் சுற்றிற்று. அதை மடியிலேயே சாய்த்துக்

கொண்டபடியே பிரசாதங்களை உட்கொண்டு, கை கழுவி விட்டுக் குழந்தையைப் பக்கத்தில் போட்டுக்கொண்டு படுத்தாள் அவள்.

குழந்தை நன்றாகத் தூங்கிவிட்டது. ஆனால் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. வெகு நேரம் வரையில் விழித்துக் கொண்டே கிடந்தாள். விடியற்காலம் நான்கு மணி சுமாருக்கு லேசாக நித்திரை வந்தபோது குழந்தையைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"என் கலி தீர்க்க வந்த கற்பகமே! என் கலியைத் தீர்த்து வைப்பாயா? என் கனவு நினைவாகுமா?" என்று முணு முணுத்தது வாய். அந்த நிலையிலேயே தூங்கிப் போன அவள் தன் கனவு நினைவாகுமா என்பதைப் பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

2. அடைக்கலம்

நாகப்பட்டணத்திற்கு அருகில் உள்ள சிக்கல் என்கிற முருகனின் திவ்ய க்ஷேத்திரத்தைப் பற்றி அநேகமாக எல்லோரும் அறிந்தே இருப்பார்கள். அந்தப் புனிதமான ஊரிலே வடக்கு வீதியிலே தனித்து நிற்கும் ஓலைக் கூரை வீடு தான் சீதம்மாள் வசிக்கும் இல்லம். கடந்த இரண்டு வருஷ காலமாக அவள் அதிலேதான் வசித்து வருகிறாள். கோவிலுக்குச் சொந்தமான நிலத்திலே ஏற்கனவே ஜீரணமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்த அந்தக் குடிசையைப் புதுப்பித்துக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார், மணியகாரர் மார்க்கசகாயம். வீட்டு வசதி அளித்தது மட்டும் அல்ல; சீதம்மாளின் குடும்ப யோக க்ஷேமத்தின் பொறுப்பு முழுவதையும் அவர் தாம் வகித்துவந்தார். அவள் விஷயத்தில் அவருக்கு அத்தனை அக்கறை ஏன் என்பதைப் பற்றி ஊரில் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ஆனால் வெளிப்படையாகத் தெரிந்த காரணம் ஒன்று உண்டு. அதன்படி, அவள் கோவில் சிப்பந்திகளில் ஒருத்தியாகும்; கோவில் பண்டாரத்தியாகத் தொண்டு செய்து வந்தாள் அவள்.

இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் எங்கே வசித்தாள், எங்கிருந்து வந்தாள், ஏன் வந்தாள், கணவனை உடையவளா, கணவனை இழந்தவளா என்பன போன்ற விவரங்கள் யாருக்குமே தெரியா. மார்க்கசகாயம் ஒருவர் தாம் அறிவார். சீதம்மாளே கூறியிருந்தாள்.

ஒரு நாள் நடுப்பகலில் பத்துமாதக் குழந்தையுடன் அந்த ஊரில் காலடி வைத்தாள் சீதம்மாள். அது சித்திரை

மாதம்; வெயில் கனல்போலத் தகித்துக் கொண்டிருந்தது. திக்குத் திசை புரியாத புது ஊரில் அவள் சரண்புகக் கூடிய இடமாக இருந்தது முருகனின் ஆலயந்தான்.

பசியின் கொடுமை தாளாமல் முதலில் இரண்டொரு வீடுகளில் போய் யாசித்தாள். யாரும் அவளது தீனக்குரலுக்குச் செவி சாய்க்கவில்லை. யாரோ சொன்னார்கள், 'கோவிலில் போய்க் கேட்டால் யாத்திரிகர்களுக்காகப் பிரசாதம் (பட்டைச் சாதம்) கொடுப்பார்கள்' என்று. அதன்படிக் கோவிலை அடைந்த சீதம்மாள் ஆலயத்தின் அமைப்பைப் பார்த்ததும் பசி தாகம் அனைத்தையும் மறந்து, பிராகாரத்தை வலம் வந்து ஆண்டவனைப் பணிந்தாள். இயற்கையாகவே முருகனிடம் பரம பக்தியுள்ள அவளைச் சிங்கார வடிவேலன் தனது மோகனப் புன்னகையால் வசீகரித்துக் கொண்டான். அந்த இடத்தை விட்டு அகல, மனமே இல்லை அவளுக்கு.

பிராகாரத்தைச் சுற்றி வரும்போது மார்க்கசகாயத்தைக் கண்டாள். "நேத்து மொதல் ஆகாரம் இல்லை. பசி காதை அடைக்கிறது. ஏதாவதுகொஞ்சம்...."என்றாள்.

சீதம்மாளை அசைப்பிலே பார்த்த மார்க்கசகாயம் அப்படியே ஸ்தம்பித்துப் போனார். கால் முதல் தலை வரை ஏற இறங்கப் பார்த்தார். பார்த்துக்கொண்டே இருந்தார். அவரது செய்கை அவளுக்குப் பிடிக்கவில்லை. என்னவோ போல் இருந்தது. மெல்ல அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தாள். அப்போதுதான் அவர் உணர்வு பெற்றார்.

"ஏம்மா? பசிக்குதுன்னே, போறயே?" என்றார். அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவரிடம் பேசவே

துணிவு வரவில்லை அவளுக்கு. கோவில் ஆள் ஒருவனை அழைத்து இரண்டு பட்டைச் சோறு அவளுக்கு அளிக்குமாறு பணித்தார் அவர். அவள் அவைகளைப் பெற்றுக் குளக் கரைக்குச் சென்று உண்டு விட்டுக் கோபுர வாசலில் நிழலில் படுத்தாள். நல்ல காற்று. சுகமான நித்திரை.

அவளது செயல்களை எட்ட இருந்து கவனித்துக் கொண்டேயிருந்த மார்க்கசகாயம், அவள் தூங்க ஆரம்பித்ததும் உக்கிராண அறையில் சென்று தம் அலுவல்களைக் கவனிக்கலானார். என்றாலும் ஒரு கண் கோபுர வாசலை வட்டமிட்டுக் கொண்டுதான் இருந்தது.

மணி நாலு அடித்தது.

"என்ன புள்ளே, இங்கே படுத்தூட்டே? நாலு பேர் வார இடம் போற இடம் இல்லையா? எழுந்திரு எழுந்திரு."

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள் சீதம்மாள். எதிரே மணியகாரர் நின்றிருப்பதைக் கண்டாள். நாற்புறமும் நோக்கினாள். மணி நாலுக்கு மேல் இருக்கும் போல் இருந்தது. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. தலை குனிந்து கொண்டாள். நிற்க முடியாமல் உடல் தள்ளாடிற்று. அந்தச் சிசு, வெப்பத்தாலும், போஷணையின்மையாலும் வெதும்பிப் போயிருந்த அந்தக் குழந்தை, பரமார்த்தியாக விளையாடிக் கொண்டிருந்தது. வாயில் திணித்துக் கொண்டிருந்த விரலை எடுத்து விட்டு அவரைப் பார்த்துக் களுக்கென்று சிரித்தது. புளகாங்கிதமானார் மார்க்கசகாயம். தாவிச் சென்று அதைத் தூக்கிக் கொள்ளத் துடித்தன அவர் கரங்கள். இடம், பொருள், ஏவல்களைச் சுட்டிக் காட்டி மனம் எச்சரித்தது. தம் அவாவைக் கஷ்டப்பட்டு அடக்

கிக்கொண்டார். நெஞ்சில் இரக்கமும் வாத்சல்யமும் பின்னிப் பிணைந்து படர்ந்து நின்றன. குரலில் ஒரு நெகிழ்வு தோன்ற, "எங்கேயிருந்து புள்ளே வாரே?" என்றார். சிறிது நேரம் தயங்கியபின், "கோயமுத்தூர்ப் பக்கத்திலேருந்து" என்றாள் சீதம்மாள். மணியகாரரின் கண்கள் அகல விரிந்தன.

- "என்ன ? கோயமுத்தூர்ப் பக்கத்திலேருந்தா? இங்கே எங்கே போறே?'

"எங்கேயும் போகல்லே. இங்கேதான் வந்தேன்."

மேலும் ஆச்சரியம் அடைந்தார் அவர்.

"இங்கேதான் வந்தயா? அப்படீன்னா ?—"

"எனக்குப் போறத்துக்குன்னு இடம் எதுவும் இல்லீங்க. ஊரூராப் போய்க்கிட்டே இருந்தேன். இந்த ஊரிலே வந்தப்புறம் இங்கேயே தங்கிப்பிடலாம் இன்னு தோணுது........"

அவர், அவளை—அவளது வாழ்க்கையை—சம்சயித்தார்.

"எடுபட்டு வந்துட்டியா?"

இப்படிக் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டார் மார்க்கசகாயம்.

அவள் விரக்தி தோன்றச் சிரித்துக் கொண்டே, "என் மூஞ்சியிலே அப்படி ஏதாச்சும் எளுதியிருக்கா சாமீ?" என்று கேட்டாள்.

அவள் நிதானமாகத்தான் கேட்டாள். என்றாலும் அவருக்குச் சுறுக்கென்று தைத்தது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ! யார் கண்டது?

"ஏதோ அவசரப்பட்டுக் கேட்டுட்டேன் புள்ளே; மனசிலே வருத்தம் வச்சுக்காதே" என்றார் சமாதானமாக.

"நீங்க மாத்திரம் இல்லே சாமி. யாரும் இப்படியே தான் கேக்கறுங்க. நான் வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்?"

"அதில்லே. பச்செப் புள்ளேயைக் கையிலே ஏந்திக்கிட்டுத் தன்னந் தனியா ஒரு பொம்புள்ளே ஊரூராப் போறப்போ, யாருக்கும் ஒரு சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்."

அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் முட்ட, "இது நான் வந்த வழி. ரொம்பப் பாவத்தெப் பண்ணிட்டேன். இப்படிப்பட்ட வார்த்தையைக் கேக்கறேன்" என்றாள். இதற்குமேல் அவளே நிறுத்தி வைத்துப் பேச அவர் மனம் இடம் தரவில்லே. அவளது சரீரம் அப்படி ஒய்ந்து போயிருந்தது. அவளுடைய வரலாறுகளே விசாரிக்கவும் அவர் மனம் கூசிற்று. தவிர, பொழுது சாய்ந்து விட்டபடியால் அவ்வழியே ஜன நடமாட்டமும் ஏற்படத் தொடங்கிவிட்டது. எனவே அவளே அங்கேயே அந்த நிலேயிலேயே விட்டுவிட்டுப் போய்விட நினேத்தார். மறுபடி ஏதோ தோன்றிற்று; கேட்டார்:

"அது போகட்டும்; இந்த ஊரிலேயே தங்கிடலாம்னு உத்தேசம் இன்னயே; சோத்துக்கு வழி?"

"ஆண்டவர் போட மாட்டாரா?"

"அதெப்படி? உன்னேப்போல ஆயிரம் பேர். இந்தக் கோவில் திட்டத்திலே ஒவ்வொரு தோசாந்தரிக்கும் மூனு

வேலைக்கு மேலே பட்டை கிடைக்காதே! ஆண்டவன் எப்படிப் போடுவார்?''

''நீங்க மனசு வச்சா எல்லாம் கிடைச்சுப் போவும் சாமீ.''

சாகசமான இந்தச் சொற்களால் அவர் திடுக்கிட்டார்.

''என்ன புள்ளே சொல்றே நீ ?''

''தப்பா ஒண்ணும் சொல்லல்லீங்க. இந்தக் கோபுர வாசல், பிராகாரம், சந்நிதி எல்லாத்தையும் பெருக்கி மொழுகிக் கோலம் போட்டுப் பாத்திரம் பண்டங்களை விளக்கிக்கிட்டு........''

''அதுக் கெல்லாம் ஆள் இருக்கே!''

''இருந்தா என்ன? அவங்கள்ளாம் உள்ளூருக்காரங்களா இருப்பாங்க, எப்படியும் பொளச்சுப் போவாங்க; நீங்களே பாத்து அவங்களுக்கு வேறே வேலே கொடுத்தாலும் போச்சு....நான் ரொம்ப நல்லாப் பூத் தொடுப்பேன். வேறே ஒண்ணும் இல்லேன்னாலும் பண்டாரத்தியா யாவது இருந்துட்டுப் போறேனே! எனக் கென்னமோ இந்த ஊரை விட்டுட்டு வேறே ஊருக்குப் போக மனசு வரலே.''

சிதம்மாளின் பேச்சை மனத்திற்குள்ளே மெச்சிக் கொண்டார் மார்க்கசகாயம். நீண்டதொரு பெரு மூச்சு விட்டுச் சிறிது நேரம் யோசித்தார்.

''சரி. ஓர் ஆளை அனுப்பறேன். வடக்கு வீதிக் கோடியிலே ஒரு குடிசை இருக்கு. அந்த ஆளு உன்னைக் கூட்டிக்கிட்டுப் போவான். நீ அங்கேபோய் இரு. ராத்திரிக்குச் சோறு அனுப்பி வைக்கிறேன். மத்த சமாசாரம்

அப்புறம் பேசிக்கலாம்'' என்று சொல்லிவிட்டுக் குழந்தையை ஒரு முறை அன்புடன் கூர்ந்து நோக்கிவிட்டுப் போய்விட்டார். அவர் கூறியபடியே சீதம்மாளை ஓர் ஆள் வந்து கூட்டிக் கொண்டு போனான். அந்தப் பாழும் குடிசையிலே கிடந்த குப்பைகளை அப்புறப்படுத்தி விட்டு ஒரு மூலையில் சிவனே என்று படுத்துக் கிடந்தாள் சீதம்மாள். சிறிது நேரத்திற்குப் பிறகு முன்பு வந்த ஆளே ஓர் இரும்புக் குடத்தில் தண்ணீரும் தகரக் குவளை ஒன்றும் கொண்டுவந்து அங்கே வைத்துச் சென்றான்.

இரவு பத்து மணிக்குமேல் இருக்கும். சீதம்மாளும் குழந்தையும் உலகை மறந்த நித்திரையில் இருந்தனர். கனைப்புச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்த சீதம்மாள், தன் எதிரில் மலைபோல் நின்றிருக்கும் மார்க்க சகாயத்தைக் கண்டு திடுக்கிட்டாள்.

3. பரிசயம்

புது இடம், தூக்கக் கலக்கம் இவைகளால் அகாலத்தில் தனித்த இடத்தில் அந்நிய புருஷனைக் கண்டு திகைத்துப் போன சீதம்மாள் கணத்தில் சமாளித்துக்கொண்டு மரியாதையாக, "வாங்க" என்றாள். கையில் இருந்த ஹரிக்கேன் விளக்கைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்த மணியகாரர், "ஆள் தண்ணி கொண்ணாந்து கொடுத்தானா?" என்று விசாரித்துவிட்டுத் தாம் கொணர்ந்திருந்த பிரசாதத்தைக் கொடுத்தார். மறுநாள் அந்தக் குடிசையை ரிப்பேர் செய்து தருவதாகவும் அவள் கவலையின்றி அங்கேயே தங்கியிருக்கலாமென்றும் கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

சீதம்மாள் நிதானமாக மூச்சுவிட்டாள். மணியகாரரைப்பற்றித் தான் கேவலமாக எண்ணமிட்டதற்காகத் தன்னையே நொந்துகொண்டாள். பிறகு அவர் கொண்டு வந்து கொடுத்த ஆகாரத்தை உட்கொண்டு படுத்துத் தூங்கி இரவைக் கழித்தாள்.

மறு நாள் 'திமுதிமு' வென்று கோவில் ஆட்கள் வந்தனர். புதுக் கீற்று, மூங்கிற் கழிகளைப் போட்டுக் குடிசையைச் செப்பனிட்டனர். பின்பு சமையலுக்குத் தேவையான மண்பாத்திரங்களையும், மளிகைச் சாமான்களையும் வாங்கிக் கொண்டுவந்து வீட்டில் நிரப்பினர்.

சீதம்மாள் மனம் சந்தோஷத்தால் பூரித்துப் போயிற்று. காலையில் எழுந்து திருக்குளத்தில் முழுகிக்

கோவிலுக்குச் சென்று முருகனைத் தரிசனம் செய்து வந்தாள்.

அன்றும் முதல் நாள் போலவே கோவிலிலிருந்து பட்டைச்சோறு வந்தது. அதை உண்டு நிர்விசாரமாகப் பொழுதைப்போக்கிய சீதம்மாள் மணியகாரரை மனமார வாழ்த்தினாள். அவரிடம் முதல் நாள், தான் கடுமையாக நடந்து கொண்டதற்காகவும் மிகவும் வருந்தினாள். அவர் வந்தால் முதற் காரியமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும், உற்ற குறைகளைக் கூறி உண்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்றெல்லாம் தீர்மானித்துக் கொண்டாள். மாலையில் அவர் வந்தபோது அப்படியே நடந்து கொள்ளவும் செய்தாள்.

"திக்கில்லாத எனக்கு நீங்கதான் பேசும் தெய்வம். ரெண்டு உசிருங்களைக் காப்பாத்தின புண்ணியம் உங்க புள்ளெகுட்டிகளைத் தலைமொறை தலைமொறையாக் காப்பாத்தும்...." என்று அடுக்கிக்கொண்டே போனாள் சீதம்மாள்.

இடி இடியென்று சிரித்தார் மார்க்கசகாயம். தான் பேசினதில் ஏதாவது தவறோ என்று துணுக்குற்றாள் சீதம்மாள்.

"....உன் ஆசீர்வாதங்களை யெல்லாம் அநுபவிக்கிறதுக்கு யாருமே இல்லே. நான் ஒரு தனி மரந்தான்.... இதிலே என்ன வந்தது? மனுஷங்க ஒருத்தருக்கொருத்தரு உதவிக்காத போனா அப்புறம் என்ன இருக்கு? ஏதோ உன்னைக் கண்டதும் என் மனசுக்கு ரொம்பக் கஷ்டமாப் போச்சு....உன்னோடை முக சாடை...."

மேலே பேச முடியாமல் திணறினார் மார்க்கசகாயம். அவர் கண்கள் கலங்கிப் போயிருந்தன. அவரும்

வாழ்க்கையில் ரொம்பவும் கஷ்டங்களை அநுபவித்தவர் என்று ஊகித்துக் கொண்டாள் சீதம்மாள்.

"இப்படிப்பட்ட மனசுள்ள உங்களை என்னுடை அறியாத்தனத்தாலே நேத்துத் தூக்கி எறிஞ்சாப்பலே பேசிட்டேனே பாவி."

"அதனாலே என்ன? நான் கேட்டதும் தப்பான கேள்விதானே?"

"நீங்க கேட்டது ஒரு வழியிலே சரிதான். ஆனா நான் 'எடுபட்டு' வல்லே. தொந்தரவு தாளாமே ஊட்டெ விட்டுக் கிளம்பிட்டேன். இன்னம் கொஞ்ச நாள் போனா அவங்க அடிச்சுத் தொரத்தியிருப்பாங்க. இல்லாட்டி என்னையும் இந்தக் குஞ்சையும் யமலோகத்துக்கு அனுப்பி யிருப்பாங்க...."

"அட பாவிங்களா! அப்படிக் கூட ஒரு ஜன்மங் களா?"

"ஆனாலும் நான் ஊட்டெ விட்டு வெளியேறினது தப்புத்தானே? ஒலக நடப்புக்கு விரோதந்தானே?"

"என்ன செய்யறது? கஷ்டம் தாங்கல்லே; கிளம் பிட்டே....!"

"யாருகிட்டே யாவது சொன்னாத்தானே என் மனசுலே இருக்கிற பளுவும் கொஞ்சம் கொறையும்? எனக்கு இன்னைக்கு இந்தப் பூலோகத்திலே உங்களைத் தவிர அன்பான மனுசங்க வேறே யாருமே இல்லே. பெத்த தகப்பனாரு மாதிரி நெனைச்சு...."

"அதெத்தான் நானும் முன்னே சொல்ல வந்தேன். பாழும் கோழெமனசு இடம் கொடுக்கல்லே. ஒன்னெப்

போலேயே எனக்கு ஒரு மக இருந்தா. அல்பாயுசிலே போயிட்டா. உன் மகளாட்டம் அவளுக்கும் ஒரு மக இருந்தது. அதுனைச்சும் இருக்கப்படாதா? என் மனசுக்கு ஒரு நிம்மதி இருக்குமே! பாவி நான் அதுக்கும் குடுத்து வைக்கல்லே.''

கண்களின் கடையில் துளித்து நின்ற கண்ணீரை விரலால் வழித்தெறிந்தார் மார்க்கசகாயம். முதல் நாள், முதல் முதலில் சந்தித்தபோது அவர் தன்னை ஏற இறங்க உற்றுப் பார்த்து ஸ்தம்பித்து நின்றது சீதம்மாளுக்கு நினைவு வந்தது. தன் குழந்தையை ஆசையோடு பார்த்த தும் ஞாபகம் வரவே, அவரது அந்தச் செய்கைகளின் கருத்தை இப்போது ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டாள்.

''தூர இருந்து பார்க்கறப்போ மத்தவங்களைப்பத்தி ஏற்படற நினைப்புக்கும், நெருங்கிப் பழகி ஒருத்தரை ஒருத்தரு நல்லா அறிஞ்சிக்கிறபோது ஏற்படற நினைப் புக்கும் துளிக்கூட சம்பந்தமே இருக்கிறது இல்லீங்க....''

ஏதோ கூற வந்தவள் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்ததும், அதில் மறைந்து நிற்கும் இருவகைக் கருத்துக் களைப் பற்றித் தானே சிந்தித்ததும் அவர் ஏதாவது தப்பாக எண்ணிக்கொண்டுவிடப் போகிறாரே என்று மறுபடியும் சற்று விஸ்தாரமாகச் சொன்னாள்.

''உங்களைப் பாத்ததும் புள்ளைகுட்டிகளோடே பரம சௌக்யமா இருக்கிறுப்பலே எனக்குத் தோணிச்சு. இப்ப நீங்க விசயத்தைச் சொன்ன அப்பறந்தான் எல்லாம் விளங்கிச்சு. மனசு ரொம்பக் கஷ்டப்படுது.''

"சம்சாரம் வசூரியிலே போயிட்டா. ஒரே ஒரு மக இருந்தா. அவளைப் பாம்பு புடுங்கிட்டது. அவ போன மூணு மாசத்துக்கெல்லாம் அவ விட்டுப்போன குஞ்சும் போயிடுச்சு. எனக்கு இந்தப் பூமியிலே யாருமே கிடையாது. ஏதோ ஆண்டவனுக்குத் தொண்டு செய்துக்கிட்டு நாளைக் கழிக்கிறேன். தத்து எடுத்துக்கச் சொல்லி ரொம்பப் பேர் சொன்னாங்க. எனக்கு அது பிடிக்கலை. இங்கே திரண்டு கிடக்கிற ஆஸ்திக்குத் தத்து ஒன்னுதான் குறைவு!....அது கிடக்கு ஒன் கதையைச் சொல்லு."

மணியகாரர் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு வெற்றிலை போட ஆரம்பித்தார். தூங்கின குழந்தை விழித்துக்கொண்டு நாற்புறமும் ஒரு முறை நோக்கி விட்டு வெற்றிலைப் பெட்டியை நோக்கி வேகமாக நீந்தி வந்தது. பாக்கு, பாக்கு வெட்டி முதலியவைகளைக் கீழே போட்டுவிட்டுக் குழந்தையை ஆசையோடு தூக்கிக்கொண்டார் மணியகாரர். அது சிரித்தது.

"இதுக்குப் பேரு என்ன?"

"எனக்கு எண்ணைக்குமே முருகன் கிட்டே நம்பிக்கை சாஸ்தி. ரொம்ப நாள் வரைக்கும் குழந்தை குட்டிக்கு வகை இல்லாமே இருந்து சஷ்டி விரதம் எடுத்துச்சாமியைக் கும்பிட்டேன். இது பொறந்தது. கிருத்திகை, வெள்ளிக் கிழமே, சஷ்டி எல்லாம் சேந்த நாள்ளே பொறந்தத்துனாலே வள்ளி இன்னு பேர் வச்சேன். இது ஒண்ணு பொறக் காட்டி நான் மண்ணோடே மண்ணாப் போயிக் கிட்டத் தட்ட ரெண்டு வருசமாவது ஆகி இருக்கும்....''

''வள்ளீ! வள்ளீ!....''

குழந்தையை ஆசையோடு அணைத்து முத்தமிட்டார் மார்க்கசகாயம். அவர் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. சிறிது நேர விளையாட்டிற்குப் பின் குழந்தை பசியால் அழ ஆரம்பித்தது. சீதம்மாள் அதை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்றாள். மணியகாரர் வெற்றிலையை மென்றுகொண்டே ஏதேதோ எண்ணமிட்டார். சீதம்மாள் திரும்பி வந்ததும் தனது பூர்வ வரலாறுகளைச் சுருக்கமாக அவரிடம் கூறத் தொடங்கினாள்.

4. சீதம்மாள்

தஞ்சாவூர் ஜில்லாவிலே வீரசோழன் பட்டி என்கிற ஊரில் கோவிந்தசாமி பிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர் பிரபல நாகசுர வித்துவான். அவருடைய ஐந்து பிள்ளைகளுக்குப் பிறகு ஆறுவதாகப் பிறந்தவள் சீதம்மாள்.

தாசிமார் வீட்டிலேதான் பெண் குழந்தைகளுக்கு அமோகமான வரவேற்பு என்பார்கள். கோவிந்தசாமி பிள்ளை வீட்டில் சீதம்மாள் பெற்ற வரவேற்புக்கும், வளர்ந்த அருமை பெருமைகளுக்கும், செல்லச் சீராட்டல்களுக்கும் மற்றதெல்லாம் உறைபோடக் காணாது என்று அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் கூறினார்கள். அப்படி ராஜோபசாரத்தில் வளர்ந்த சீதம்மாள் பதினெட்டாவது பிராயத்தில் கோயம்புத்தூருக்கு அருகே உள்ள பூவிருந்த நல்லூர்ப் பொன்னுசாமி பிள்ளையின் மனைவியானாள்.

கல்யாணம் மிகவும் விமரிசையாக நடந்தது. பணச் செலவு ஏராளம். பாட்டுக் கச்சேரிகளும், சதிர்க்கச்சேரிகளும் ஏக தடபுடல். கல்யாணத்தை இசைத்து வைத்த ஜோஸ்யருக்கு மட்டுமே ஜரிகை உருமாலும் நூறு வராகனும் சம்மானம் என்றால் மற்ற வைபவங்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? நெடு நாள் வரையில் அந்த வட்டாரங்களில் அந்தக் கல்யாணத்தைப் பற்றின பேச்சு முழங்கிக் கொண்டிருந்தது.

சீதம்மாள் புருஷன்வீடு சென்றாள்.

பொன்னுசாமி பிள்ளை குலத் தொழிலில் ஈடு படவில்லை. ஏதோ வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பெயரால் தந்தை சேகரித்து வைத்த சொத்தை அழித்துக் கொண்டிருந்தார் என்று சொல்வதே மிகப் பொருத்தம். துஷ்டர் சிநேகம், குடி, சூதாட்டம் முதலியவைகளில் அளவு கடந்து ஈடுபட்டிருந்த அவர் சீதம்மாளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கல்யாணத்திற்கு முன் லேசாக, இலை மறைவு, தலை மறைவாக இருந்த துரப்பியாசங்கள் எல்லாம் கல்யாணத்திற்குப்பின் அளவைக்கடந்தன.

சீதம்மாள் ஆடை ஆபரண அலங்காரங்களினால் ஏதோ ஒரு மாதிரியாகத் தோற்றம் அளித்தாளே தவிர அழகு என்பது அணுவளவும் அவளிடம் இல்லை. பொன்னுசாமி பிள்ளை சதா சர்வகாலமும் தாசிகளின் வீடே கதியென்று கிடந்ததற்குத் தனது ரூபமே தான் காரணமென்று தீர்மானம் கொண்ட சீதம்மாள், தன்னைப் படைத்த பிரம்ம தேவனையும் தனது ஊழ் வினையையும் நொந்து கொண்டாள். அதற்காகக் 'கோணல் மாணலாக' நடந்து கொள்ளவில்லை. வீட்டுக் காரியங்கள், பதி சேவை, தெய்வ ஆராதனை முதலியவைகளில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து தனது வாழ்வின் சோபையை எதிர் நோக்கித் தவம் கிடந்தாள். ஆனால் விதி அவளுக்குச் சதி செய்தது எங்கெங்கோ சுற்றி அலைந்து கெட்டுத் திரிந்த பொன்னுசாமி பிள்ளை ஒரு நாள் ஒரு பெண்ணை மணம் புரிந்து வீட்டிற்கே அழைத்து வந்து விட்டார். அவள் ஒரு தாசி மகள் என்பதை அறிந்த போது சீதம்மாள் துக்கித்தாள்.

குலப் பெருமை, ஆசாரம், அநுஷ்டானம் அனைத்திற்கும் இடையூறாக, ஊரார் ஏசவும், கண்டவர்

கண்டபடி பேசவும் இடமாக எங்கோ கெட்டழிந்த ஒரு தாசியை மணந்த தோடல்லாமல் வீட்டோடும் அழைத்து வந்து வைத்துக் கொண்டது மிகவும் தவறென நயமாக எடுத்துக் கூறினாள்.

முதலில் அவளது முறையீடுகளுக்குச் செவிகொடாமல் இருந்த பொன்னுசாமி பிள்ளை, பிறகு அடிக்கடி இது சம்பந்தமாகச் சீதம்மாள் வற்புறுத்தி உபதேசிப்பதைக் கண்டித்தார். சீறி விழுந்தார். கெடு பிடிகள் செய்தார். "அவள் தான் இந்த வீட்டிற்கு எஜமானி; நீ அவளுக்குக் குற்றேவல் புரியும் வேலைக்காரி" என்றார். இளைய மனையாளோடு கூடிக் கொட்ட மடித்தார். சீதம்மாள் ஏதும் பேச வகையற்று வாயடைத்துப் போனாள். நாளுக்கு நாள் அவள் கஷ்டம் அதிகரித்தது.

பொன்னுசாமி பிள்ளையின் போக்கு நாளுக்கு நாள் அதிக விபரீதமாகிக் கொண்டிருந்தது. இந்நிலையில் புது மனைவி ஒரு பெண் மகவுக்குத் தாயுமானாள். சீதம்மாள் வாழ வந்து வருஷங்கள் பல ஆகியும் மரம் போல் நின்றிருக்க, நேற்று வந்தவள் சுடர் போல ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தது பற்றி ஊராரே ஏதேதோ வம்பளந்த போது, பிள்ளையும் அவருடைய புது மனைவியும் அவளை நிஷித்தம் செய்யக் கேட்கவா வேண்டும்?

குழந்தை படுசுட்டியாக இருந்தது. அதன் பெயர் ஸ்வர்ணப்ரபா. அது பலவித லீலா விநோதங்களைப் புரிந்து பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்துவந்தது.

சங்கீத ஞானம் அதற்கு இயற்கை வரப் பிரசாதமாக அமைந்திருந்தது. தாய் அபிப்பிராயப்பட்டாள். ஊராரும் அதையே கூறினர். பிள்ளையும் அப்படியே செய்தார்

ஸ்வர்ணப்ரபா இசைக் கலை பயில ஆரம்பித்தாள். வயது பதினைந்தாகும் போது அரங்கேற்றத்திற்குத் தயாரானாள். அப்போதுதான் ஓர் ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது.

ஏனென்று கேட்பாரற்று வீட்டில் ஏவல் செய்து கொண்டு கிடந்த சீதம்மாளின் சரீர நிலைபற்றி எப்போதுமே கவலைப்படுவார் யாரும் இல்லை. நலிந்து நாசமாய்ப் போயிருந்த அந்தச் சரீரம் இப்போது புது மாறுதலைப் பெற்று மின்னிற்று.

நாளடைவில் மலிந்து அம்பலத்திற்கும் வந்தது செய்தி. பொன்னுசாமி பிள்ளை வெகுண்டார். தாம் எந்த நாளிலும் கண்ணெடுத்தும் நோக்காத சீதம்மாள் கருவுற்றது அவரைத் திகைப்புறச் செய்தது. யோசித்து முடிவில் அவள் நடத்தையிலே தாம் கொண்ட சம்சயத்தையே ஸ்திரப் படுத்திக் கொண்டார்.

இத்தால் வேறு சீதம்மாளுக்குக் கஷ்டங்கள்! அவளைக் கடுமையாகச் சிட்சிக்கத் தொடங்கினார் பிள்ளை. கொலை செய்துவிடவும் தயாராக இருந்தார். புது மனைவி—குரூர குணம் படைத்த அவளுக்கு ஏனோ அப்படித் தோன்றிற்று—சீதம்மாளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிட யோசனை கூறினாள்.

பொன்னுசாமி பிள்ளையின் நடவடிக்கை காரணமாகச் சீதம்மாளின் பிறந்த வீட்டு மனிதர் வரத்துப் போக்கு நின்று போய் வெகு காலமாகியிருந்தது. யாரோ ஒருவரைத் துணை சேர்த்துச் சீதம்மாளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பிவைத்தார் பொன்னுசாமிபிள்ளை.

கோவிந்தசாமி பிள்ளை காலமான பிறகு அவர் புதல்வர்கள் சச்சரவு செய்து கொண்டு திக்குக்கு ஒருவ

ராகப் பிரிந்து போயினர். வீட்டில் வயது சென்ற கிழவி தான் இருந்தாள். பாவம்! சீதம்மாளைப் பிறந்த வீட்டிலும் துயரமும் வறுமையுமே வரவேற்றன. அது அவள் வந்த வழி.

நல்ல நாளில் நல்ல வேளையில் சீதம்மாள் பெண் குழந்தையை ஈன்றாள். தனது விருப்பப்படி வள்ளி என அதற்குப் பெயர் சூட்டினாள். தான் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் அதன் முகத்திலே ஆறினாள். பொன்னுசாமி பிள்ளை நல்ல சிவப்பு, லட்சணம். வள்ளியும் அப்படியே தான் இருந்தாள். பிள்ளையின் சாயலை உரித்துக்கொண்டு வந்திருந்தாள். ஆனால் ஆறு மாதங்களைக் கடந்து அந்தப் பச்சைப் பூவைக் கையில் ஏந்திக் கொண்டு சீதம்மாள் பூவிருந்த நல்லூருக்கு வந்தபோது அவரது கண்களில் ஏனோ அந்தக் குழந்தையினிடம் பிரகாசிக்கும் தம் உருவச்சாயை தென்படவில்லை!

அவர் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். வீட்டினுள் நுழையக்கூடாதெனத் தடுத்தார். தான் விபசாரியல்லவென்று வாதாடினாள் சீதம்மாள். குறிப்பிட்ட நாளில் பொன்னுசாமி பிள்ளையும் தானும் உறவு பூண்டிருந்ததை நிதானமாக எடுத்துக் கூறினாள்.

இளைய மனைவி மூன்றாவது பிரசவத்தை முன்னிட்டுத் தாய் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் அது. எங்கோ சுற்றி அலைந்து விட்டு வீடு வந்து சேர்ந்த பொன்னுசாமி பிள்ளை ஏதோ வெறியில் சீதம்மாளிடம் உறவாடினார். தெய்வ சோதனையாக அந்த உறவு வள்ளியின் ஜனனத்திற்குக் காரணமாயிற்று.

ஆனால் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததாகவே அவருக்கு ஞாபகமில்லையே! ஒருகால் ஞாபகம் இருந்தும்

தான் வேண்டுமென்று இப்படிச் சதி செய்கிறாரோ என்னவோ, யார் கண்டது? இல்லாவிட்டால் அவள் சகுந்தலையைப்போல நாள், கிழமை, நட்சத்திரமெல்லாம் எடுத்துக் கூறியும் அவர் துஷ்யந்தனைப்போல ஒரேயடியாக மறுத்துப் பேசுவானேன்? எல்லாம் விதி செய்யும் கூற்றுத் தான்!

அன்று சிவநகர் ஜமீன்தார் அரண்மனையில் ஸ்வர்ணப்ரபாவின் கச்சேரி. பொன்னுசாமி பிள்ளை வீட்டின் முன், வண்டிகளுடன் காத்திருந்தனர் அரண்மனைச் சிப்பந்திகள். பொன்னுசாமி பிள்ளை, ஸ்வர்ணப்ரபா, அவள் தாய், பக்க வாத்தியக்காரர்கள் எல்லோரும் பிரயாணத்திற்குச் சித்தமாயிருந்தனர். அந்தச் சமயத்திலேதான் வள்ளியுடன் வந்து வாசலில் நின்றிருந்தாள் சீதம்மாள்.

அங்கே அப்போது உள்ள நிலைமையில், தான் அவ்வாறு நிராதரவாக நின்றிருந்தது சீதம்மாள் மனத்தைப் பெரிதும் வாட்டிற்று. உடன் பிறந்த சகோதரர்கள் அறுவர் வீமனும் சூரனுமாக இருந்தும் தன்னந் தனியே தான் வந்திருந்தாள் அவள்.

பக்க வாத்தியக்காரர்கள் வந்து வண்டியில் அமர்ந்தனர். ஸ்வர்ணப்ரபாவும் அவள் தாயும் இன்னொரு வண்டியில் ஏறிக் கொண்டனர். பொன்னுசாமி பிள்ளையும் வண்டியில் ஏறி அமர்ந்தார். வீட்டுக்கதவு பூட்டப்பட்டது. ஆயிற்று; வண்டி புறப்படும் நேரம். கண்ணீரும் கம்பலையுமாக நின்றிருந்தாள் சீதம்மாள்.

பொன்னுசாமி பிள்ளையின் காலடியில் விழுந்து கெஞ்சி, அவரால் உதைத்துத் தள்ளப்பட்டதையும்

பொருட்படுத்தாமல் மேலும் மேலும் அவரை மன்றாடிக் கொண்டிருந்தாள். இம்மியும் பயன் இல்லை. ஏனோ திடீரென்று அவளுக்கு அப்படி ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஓட்டமும் நடையுமாக ஸ்வர்ணப்ரபா அமர்ந்திருந்த வண்டியை அணுகினாள். அவள் தாயின் மோவாயைப் பிடித்துக் கெஞ்சினாள்.

"........அம்மா! பாக்கியம் பண்ணினவளே! நீயாவது கொஞ்சம் அவருகிட்டச் சொல்லப்படாதா? இதோ! இந்தக் குளந்தையோட முகத்தைப் பாரு; உம் பொண்ணு சொர்ணப்ரபாவோட முகத்தையும் பாரு; எதினாச்சும் வித்தியாசம் இருக்கா? நீயே சொல்லேன்....இவரு.... இப்படி... ...."

"சீ!" என்று சிதம்மாளின் கையை உதறித் தள்ளினாள் அந்தப் 'பாக்கியவதி'. "கூறுகெட்டவளே! யாரையும் யாரையும் ஒப்பிட்டுப் பேசறே! என் மவள் இன்னைக்கு அரமனையிலே ஆயிரம் ரூபா சம்மானம் வாங்கப்போறா. அவளோடே கொண்ணாந்து உன் தரித்திரத்தெ ஈடுகட்டறயே! போ போ!" என்று கடுகடுத்துக் கூறினாள். பொன்னுசாமி பிள்ளை இதைக் கேட்டு இடி இடி என்று சிரித்தார். ஸ்வர்ணப்ரபா சிரித்தாள். பக்க வாத்தியக்காரர்கள் சிரித்தார்கள். கூடியிருந்த எல்லோருமே சிரித்தார்கள்.

"ஏன் இன்னம் தாமசமாம்? வண்டியை விடச்சொல்லுங்களேன்!" என்றாள் அவள்.

அவர் ஆக்ஞாபித்தார். வண்டி நகர்ந்தது.

வண்டியை ஒட்டினாற்போல நின்றிருந்த சிதம்மாள் அயர்ந்திருந்த சமயம் வண்டி நகரவும், குழந்தை பொத்தென்று கீழே விழுந்தது.

'வீல் வீல்!' என்று அது அலறுவதைக் கண்டு மேலும் எல்லோரும் சிரித்தனர். சீதம்மாள் மரம் போன்று நின்றிருந்தாள். கீழே கிடந்து புழுப்போலத் துடிக்கும் குழந்தையை எடுக்க வேண்டும் என்கிற உணர்ச்சி கூட அவளுக்கு ஏற்படவில்லை. அந்தப் 'பாக்கியவதி'யின் சொற்களே அவள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

அவள் கண்ணகியாக மாறினாள்.

"........அடி! சண்டாளி! எந்தப் புத்துலே எந்தப் பாம்பு இருக்கும்னு யார் கண்டது? ஒன் மவ பொறக்கற போதே இப்படிப் பொறந்தாளா? இப்படி ஆவான்னு அன்னிக்கு யாருக்காச்சும் தெரியுமா? அதேமாதிரி என் மவளும் எந்த வழிக்கு வந்திருக்கான்னு யார் கண்டது? ஒரே அப்பனுக்குப் பொறந்தவங்கதானே? இவளும் நாளைக்கு ஆயிர ரூவாக் கச்சேரி ஏன் பண்ணப்படாது?"

"........ஹஹ்ஹஹ்ஹா!....மோறையைப் பாத்தாலே தெரியுதே!....ஹிஹிஹி!"

"நல்லது; இந்த வள்ளி இந்தப் பொன்னுசாமி பிள்ளைக்குப் பொறந்தது உண்மையா இருந்தா, சொர்ணத்தெப் போலே ஆயிரம் ரூவாக் கச்சேரி பண்ணும்படி அந்த முருகன் செய்யட்டும்!"

விறுக்கென்று கிளம்பின வண்டிகள். புழுதிப்படலம் மேலே எழுந்து சீதம்மாளையும் வள்ளியையும் வண்டியில் போய்க் கொண்டிருப்பவர்களின் பார்வையினின்றும் மறைத்தது. அவர்கள் எக்களிப்புடன் ஏதேதோ பேசிக் கொண்டே சென்றனர். வண்டிகள் ஓடி மறைந்தன.

சீதம்மாள் முன் உலகமே புரள்வதுபோன்ற ஒரு தோற்றம். குழந்தை அழுது அழுது தொண்டை வறண்டு

போய் அழுகை அடங்கி விக்கிய வண்ணம் அவள் கால்களை பற்றின. அவள் உணர்வு பெற்றாள். கீழே குனிந்து குழந்தையை எடுத்தாள். "வாடி என் ராஜாத்தியே!" என்று இடுப்பிலே வைத்துக் கொண்டாள். அங்கே இரண்டொரு சிறுவர்களும் சிறுமிகளும் நின்று மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தனர்.

சீதம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். பல வருஷகாலம் வாழ்ந்து வளைய வந்த வீட்டை நோக்கினாள். கதவிலே தொங்கிய பூட்டுக்கூட அவளைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது. மறுபடி அழுகை வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்; நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டாள்; நடக்கலானாள். எங்கே போகிறோம் என்பது புரியாமலே போய்க் கொண்டிருந்தாள். எத்தனையோ பகல், எத்தனையோ இரவு, எவ்வளவோ கிராமம், எவ்வளவோ நகரம். கடைசியாக இன்று சிக்கல். இது தான் நிரந்தரமாயிற்று.

* * *

கதை கேட்பதுபோலச் சுவாரசியமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார் மார்க்கசகாயம். இடையிடையே அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் பல. முடிவில் விரக்திதோன்ற நகைத்துக் கொண்டே, "எக்கச் சக்கமாக ஒரு பெரிய சபதத்தைக் கண்ணை மூடிக்கிட்டு செய்துட்டையே! எப்படி நி றவேறும்?" என்றார்.

"என்னவோ, அப்போ மனசு இருந்த இருப்பு அப்படிச் செய்யத் தூண்டிச்சு. முருகன்தான் தெய்வமாயிருந்து என்னோடே எண்ணத்தெ நிறைவேத்தணுங்க. மனிச யத்தனத்துலே உங்களைத்தான் நம்பியிருக்கேன்" என்றாள் சீதம்மாள்.

கோவிலிலிருந்து எழுந்த சாயரட்சைப் பூசை மணி யோசை காற்றில் கலந்து வந்து மணியகாரரின் சிந்தனையைக் கலைத்தது. கடமைகள் முன்னின்று அவரை அழைத்தன. எழுந்தார். "நான் போய்வாரேன் அம்மா" என்று துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெற்றிலைப் பெட்டியும் கையுமாகக் கிளம்பினார்.

அவர் எழுந்து நின்றதும் தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த வள்ளி எக்களிப்புடன் விரைவாகத் தவழ்ந்து வந்து அவர் கால்களைப் பற்றிக் கொண்டாள். அவர் மனம் குழைந்தது. குழந்தையை எடுத்து முத்தமிட்டார்.

"மொகத்தெப் பாத்தா நீ நினைக்கிற அளவுக்கு மேம்பட்ட காரியங்களைக் கூடச் சாதிக்கும்னுதான் தோணுது. பாக்கலாம்" என்று கூறிவிட்டுக் குழந்தையைச் சீதம்மாளிடம் கொடுத்துவிட்டுப் போனார்.

மார்க்கசகாயம் மட்டும் என்ன? வள்ளியைப் பார்த்த எல்லோருமேதான் அவளிடம் வசியப்பட்டுப் போயினர். அவள் அப்படியொரு மோகன வலையை வீசி வந்தாள். சீதம்மாளின் பணிந்துபோகும் சுபாவத்தினால், நல்ல தன்மைகளினால், வடக்கு வீதிமட்டும் அல்ல; அந்த ஊரில் உள்ள எல்லோருமே அதி சீக்கிரத்தில் அவளுக்குப் பரிசயமாயினர். அவளுக்குப் பரிசயமான அத்தனை வீடுகளிலும் வள்ளி வளைய வந்தாள்.

வள்ளிக்குத் தன் தாய், தன் வீடு என்கிற வேற்றுமைகளே இல்லை. ஊரில் உள்ள வீடுகள் அனைத்தும் அவளுடையவைதாம். எல்லோரும் உறவினர்தாம். பேதா பேதமற்ற அவளது சரச குணமும், ஜகன்மோகன உருவமும் சிக்கலில் உள்ள அத்தனை பேரையும் பாசத்தில் சிக்கவைத்தன.

5. வள்ளி

வள்ளி வளர்ந்தாள். ஐந்து பிராயத்தை அடைந்ததும், அவளைப் பள்ளியில் சேர்த்தார் மார்க்கசகாயம். தொடர்ந்து இசைப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தார். கோவிலில் மேளம் சேவிக்கும் கந்தப்ப பிள்ளையின் சிஷ்யையானாள் வள்ளி.

கந்தப்ப பிள்ளைக்கு வயசு ஐம்பதுக்கு மேல் இருக்கும். பிறந்தது முதலே அந்த க்ஷேத்திரத்தில் கோவில் கொண்டிருக்கும் சிங்கார வடிவேலனின் தொண்டிலேயே தமது நாளைக் கடத்திய அவர் அபார ஞானஸ்தராயிருந்தும் அதிருஷ்ட மின்மையால் பிராபல்யம் அடையாமல் இருந்தார். ஆனால் அவரிடம் தயாரானவர்களோ பேரும் புகழுமாகக் காலம் தள்ளி வந்தனர்.

கந்தப்ப பிள்ளையின் சிஷ்யர்கள் அநேகர். எந்த நேரமும் அவர் வீட்டில் சங்கீதாப்பியாசம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். சரளி வரிசை முதல் கச்சேரி விவகாரம் வரையில்பல அம்சங்கள். கந்தப்ப பிள்ளை தமது 'ஆகிவந்த வாக்'கால் வள்ளிக்கு இசையை ஆரம்பித்து வைத்தார். பின்னர் அந்தக் காரியத்தை அவருடைய சிஷ்யர்களில் யாரேனும் தொடர்ந்து செய்து வந்தனர்.

ஏக சந்தக் கிராகி என்கிற வார்த்தை வள்ளி விஷயத்தில் முற்றும் பொருத்தமாக இருந்தது. எப்பேர்ப்பட்ட கரடு முரடான விஷயமாயினும் சரி, ஒரு முறை சொல்லிக் கொடுத்து விட்டால் போதும்; புகைப் படம் பிடித்ததுபோல் அப்படியே கிரகித்துக் கொண்டு

விடுவாள் அவள். மதியிற் சிறந்த அவளுக்குச் சாரீரம் அமைந்த விதந்தான் குறிப்பிடத் தக்கது. அவளுக்கு முன், பல நாட்களுக்கு முன், பல மாதங்களுக்கு முன் சிட்சை பெற வந்தவர்கள் திணறித் திக்குமுக்கலாடிக் கொண்டிருக்க எத்தகைய கஷ்டமான விஷயங்களையும் தனது அறிவாலும், சாரீர வசதியாலும் உருவாக்கிக் காண்பித்தாள் வள்ளி. சரளமான, ஜிலு ஜிலுப்பு நிறைந்த அவளது சாரீரத்தை, அதிலே தோன்றும் 'உதவு பிடி'களைக் கண்டு எல்லோரும் பிரமித்தே போயினர். கந்தப்ப பிள்ளை வெள்ளிக்கிழமை தோறும் வள்ளிக்குத் திருஷ்டி கழித்து வந்தார் என்றால் வேறு என்ன கூற வேண்டும்?

வள்ளி பத்தாவது வயதை எட்டிப் பிடித்தபோது சங்கீதக் கச்சேரி செய்யும் மேடையையும் எட்டிப் பிடிக்கும் நிலைக்கு வந்து விட்டாள். மார்க்கசகாயம் உள்ளம் பூரித்தார். கந்தப்ப பிள்ளைக்குக் கோவிலிலிருந்து விசேஷ அநுகூலங்கள் செய்து கொடுத்தது மன்றித் தம் சொத்திலிருந்தும் ஏராளமான சம்மானங்களை அள்ளிக் கொடுத்தார்.

சீதம்மாளின் மனம் சந்தோஷத்தால் நிறைந்தது. அடிக்கடி அவள் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்து ஓடும். 'சீனுப் பிரேதம்' என்று சொல்வார்களே, அப்படி இருந்த அவளது உடல் தேறிப் புது மெருகு ஏறிவிட்டது. பட்ட கஷ்டங்களை மறக்கக்கூடிய நிலையில் தனது குலக் கொழுந்து பிரகாசிக்கப் போகிறாள் என்கிற ஆனந்தந்தான் அதற்குக் காரணம் என்று கூறவும் வேண்டுமா? ஆனால்—

முருகன் அவளை மறுபடி சோதனை செய்ய நினைத்தான். திருவிளையாடல்கள் பல புரிய ஆரம்பித்தான்.

திடீரென்று அரசாங்கத்தினருக்குக் கோவில்களின் மீது கவனம் பிறந்தது. அவர்கள் தேவஸ்தானத்தில் செய்த பல மாறுதல்களில் மார்க்கசகாயம் மணியகாரர் வேலையினின்றும் விலக்கப்பட்டதும் ஒன்றாகும்.

அரசாங்கத்தினர் சார்பாக நிர்வாகி ஒருவர் முளைத்தார். மார்க்கசகாயம் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அது வரையில் வீடுவாசல் எதைப் பற்றின சிந்தனையும் இல்லாமலிருந்த அவர் அவைகளில் கருத்தைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சீதம்மாள் வசித்த குடிசையை உடனடியாகக் காலி செய்து கொடுக்க வேண்டியதாயிற்று. வள்ளியையும் அவளையும் தம் வீட்டோடு கொண்டுபோய் வைத்துக் கொண்டார் மார்க்கசகாயம். ஊரார் இதைப்பற்றி வம்பளக்கத்தான் செய்தனர். மார்க்கசகாயம் எதையும் லட்சியம் செய்யவில்லை.

ஏதோ ஒரு சிறு மனைத் தகராறு. சின்ன உருவிலே தோன்றிய அது மலைபோல வளர்ந்தது. எதிர்க் கட்சியில் செல்வமும் செல்வாக்கும் அதிகம். மார்க்கசகாயத்திற்கோ செல்வம் அதிகம் இல்லை. கோவில்போன பிறகு செல்வாக்கும் இல்லை. ரோசவானாகையால் தணிந்து போகும் சுபாவமும் இல்லை. பல்லை இழந்த பாம்புபோலச் சீறினார். வம்பும் வியாச்சியமும் மூண்டு எழுந்தன. நாகப்பட்டணம் கோர்ட்டுக்கும் சிக்கலுக்குமாக அலைந்தார் மார்க்கசகாயம். பாவம், தளர்ந்த வயதில் இத்தனை வீம்பு வேண்டியதில்லை.

விதியின் லீலையைத் தடுக்க வல்லவர் யார்? வருஷக் கணக்காக நடந்த வியாச்சியத்தின் பயனுகச் சொத்து, சுதந்தரம் அனைத்தையும் இழந்து ஒட்டாண்டியானுர் மார்க்கசகாயம். ஊரில் பாதிக்குமேல் இந்த விவகாரத் தினுல் விரோதம்.

ஏக்கம் கொண்ட அவருக்குச் சிக்கலே கசந்து போயிற்று. ஊரை விட்டு வெளியேறிவிடத் தோன்றிற்று. எங்கேபோவது, என்ன செய்வது? சீதம்மாளையும் வள்ளியையும் அநாதரவாக விட்டுச்செல்ல மனம்வரவில்லை. தம்முடன் அழைத்துச் சென்ருல் வள்ளியின் சங்கீதாப்பி யாசம் கெட்டுவிடுமே எனத் தயங்கினுர். ஆயிற்று, இன் னும் ஒரு வருஷம் போனுல் அவள் கச்சேரி செய்யத் தொடங்கிவிடுவாள். பிறகு கவலை இல்லை. ஆனுல்....அது வரைக்கும்........?

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் திடீரென்று ஒரு நாள் இறந்து கிடந்தார் கந்தப்ப பிள்ளை. எத்தனையோ தடவை மாரடைப்பு வந்து பிழைத்தவர் இன்னும் சிறிது காலமும் உயிரோடிருக்கக் கூடாதா? அதுவும் வள்ளியின் துர்ப்பாக் கியம் என்றுதான் சொல்லவேண்டும். ஆனுல் இது மார்க்க சகாயத்தின் எண்ணத்திற்கு அநுகூலமாயிற்று. "சரிதான் போ!" என்று ஊரை விட்டுக் கிளம்பி விட்டார். காலட் சேபத்திற்கு என்ன செய்வது என்கிற பிரச்னைக்குப் பதிலே கிடைக்கவில்லை.

கும்பகோணத்திலே ஒரு சின்னஞ் சிறு தெருவிலே ஒரு சிறிய வீட்டில் வள்ளி, சீதம்மாள் சகிதம் குடியேறி னுர் அவர். கையிருப்பை வைத்துக் கொண்டு ஏதோ கௌரவமாகக் காலத்தைத் தள்ளி வந்தார்.

6. குரு தக்ஷிணை

"நல்ல பிள்ளை. சிறு வயசாயிருந்தாலும் அபார ஞானம். பேரும் புகழும் தேடிவந்து குவிகின்றன. எல்லாவற்றையும் விடச் சிட்சை சொல்லிக் கொடுப்பதிலே ஒரு தனிப்பட்ட விசேஷ சக்தி. பேசாமல் என் வார்த்தையை நம்பிக் குழந்தையை ஒப்படையுங்கள்" என்றார் சம்பந்தம் பிள்ளை. அவர் மார்க்கசகாயத்தின் பால்ய நண்பர். கும்பகோணத்திலே சொந்தமாக ஜவுளிக்கடை வைத்திருந்தார். அந்தக் கடையிலேதான் மார்க்கசகாயம் மேற்பார்வையாளராக அமர்ந்திருந்தார்.

என்ன செய்வது? ஜீவனம் நடக்கவேண்டுமே! கையிருப்புத் தீர்ந்து கடன் உடன் என்று ஏற்பட்டதும் தத்தளித்துப் போனார் அவர். 'வயசான காலத்திலே நமக்கு ஏன் இந்தக் கஷ்டம்? பேசாமல் எங்காவது ஓடி விடுவோமா' என்று எத்தனையோ தடவை அவர் எண்ணமிட்டது உண்டு. ஆனால், "தாத்தா!" என்று எங்கிருந்தோ ஓட்டமாக ஓடிவந்து வள்ளி கழுத்தைக் கட்டிக் கொண்டதும் அனைத்தும் மறந்துபோய்விடும். கஷ்டங்களையெல்லாம் மறந்து பொக்கைவாயை மலர்த்திச் சிரிப்பார். "செய்யாத வேலைகளைச் செய்தாவது குழந்தையைக் காப்பாற்றி மனுவாக்கி விட்டு விடவேண்டும்" என்று உறுதி கொள்வார்.

தற்செயலாக ஒரு நாள் சம்பந்தம் பிள்ளையைச் சந்தித்தார். பல வருஷ யோகக்ஷேமங்கள் பேச்சிலே புகுந்து புறப்பட்டன. அன்றைய நிலையை உணர்ந்த சம்பந்தம் பிள்ளை உதவி செய்யும் மனப்பான்மையுடன்

அவரைத் தமது ஜவுளிக் கடையில் இருக்க ஏற்பாடு செய்து செலவுகளுக்குப் போதிய பணம் கொடுத்து வந்தார். கேள்வி மூலம் மட்டுமே வள்ளியைப் பற்றி அறிந்திருந்த சம்பந்தம் பிள்ளை ஒரு நாள் அவளை நேரில் கண்டார்.

வள்ளியின் தோற்றமும், கள்ளம் கபடமற்ற நடவடிக்கையும், கணீர் என்ற குரலில் எழுந்த சங்கீதமும் அவரைப் பரவசமுறச் செய்தன. இதை அரைகுறையாக விடக்கூடாது என்கிற எண்ணம் அவருக்கே ஏற்பட்டது. அதன் பேரில் சங்கீத வித்துவான் ராகவனைச் சிபாரிசு செய்தார்.

ராகவன் திருச்சிராப்பள்ளியிலே வசித்து வந்தான். சம்பந்தம் பிள்ளையின் தாட்சிண்யத்திற்காகவும், 'பெயர் எடுக்கக்கூடிய பெண்' என்பதற்காகவும் பிரதிபலன் எதுவும் எதிர்பாராமல் வள்ளிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொண்டான். ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது? வள்ளி, சீதம்மாள் இருவரையும் திருச்சிக்கு அனுப்பிவைக்கும்படி யோசனை கூறினார் சம்பந்தம் பிள்ளை. வேறுவழியின்றி அதன்படியே செய்தார் மார்க்கசகாயம் செலவுக்கு வேண்டியதை அனுப்பி வைத்து விடுவதென உறுதி பூண்டார் சம்பந்தம் பிள்ளை. இந்த ஏற்பாட்டின்படி தாயும் மகளும் திருச்சியில் குடியேறினர். மார்க்கசகாயம் மாதம் ஒருமுறை போய்ப் பார்த்து வந்தார்.

சின்னக் குழந்தையில் வள்ளியை ஒட்டுப்புல் என்று எல்லோரும் சொல்வார்கள். வேற்றுமையின்றிப் பழகும் அந்தக் குழந்தையை எல்லோரும் பெரிதும் விரும்பினர். யார் வீட்டில் என்ன செய்தாலும் 'வள்ளிக்கு, வள்ளிக்கு' என்று ஒரு பங்கு எடுத்து வைத்து விடுவார்கள்.

குறிவைத்தாற் போல அவளும் சமயத்தில் போய்ச் சேரு வாள். எதுவானாலும் வள்ளிசாப்பிட்டால்தான் அவர்களுக் குத் தாம் சாப்பிட்டது போலிருக்கும். ஊர்ப் பிச்சையாக வளர்ந்த அந்தக் குழந்தை சம்பந்தமாக மார்க்கசகாயம், சீதம்மாள் இவர்களுக்கு ஒரு தொந்தரவும் இருப்பதில்லை; ஒரு பைசாச் செலவு ஏற்படுவதும் இல்லை.

எப்பொழுது பார்த்தாலும் யாருடைய மார் மீதாவது, யாருடைய தோள்மீதாவது அவள் இருப்பாள். யார் வீட்டிலாவது ஏதாவது சாப்பிடுவாள். வசதி உள்ள வர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சட்டை முதலியன தைக்கும்போது வள்ளிக்கும் ஒன்று சேர்த்தே தைத்து விடுவார்கள். சாதாரண நாட்களிலேயே இப்படி வழக்கம் என்றால் தீபாவளி, பொங்கல் முதலிய சந்தர்ப்பங்களில் கேட்கவா வேண்டும்?

காலை ஏழு மணிக்கு வெண்ணெய் போலத் தலையை வாரிப் பின்னிவிடுவாள் சீதம்மாள். ஒன்பது மணிக்கு யார் வீட்டிற்காவது போகும்போது தலை சற்றுக்கலைந் தாற் போல் இருக்கும். அது அவர்களுக்குப் பொறுக் காது. தைலம் தடவி வாரிச் சடைபோட்டு விடுவார்கள்.

பகல் ஒரு மணி சுமாருக்கு வேறு ஒரு வீட்டில் இப்படி நடக்கும். பிறகு மாலையில் ஒரு முறை. இப் படியே ஒரு நாளைக்குச் சுமார் ஐந்தாறு தடவைகளாவது வள்ளியின் தலை வாரிப் பின்னப்படும். ஒவ்வொரு தட வைக்கும் எண்ணெய், தைலம், ரிப்பன், பூ நூல், பௌடர், சட்டை முதலியன மாறிக்கொண்டே இருக்கும்.

சில குழந்தைகளைப் போலச் சிணுங்கி அழமாட்டாள். அவள். அலங்காரம் செய்யவென்றால் தயாராக இருப்பாள்

மழ மழ வென்ற சரீரத்தையும் கரு கருவென்று சுருள் சுருளாகக் கறுத்தடர்ந்து வளர்ந்திருக்கும் கேசத்தையும் தொட்டு அலங்கரிப்பதிலே எல்லோருக்கும் ஓர் அலாதி ஆசை.

சிக்கலில் ஒரு வயதுக் குழந்தையில் ஏற்பட்ட இந்தப் பழக்கவழக்கங்கள் வயது ஏற ஏற அதிகரித்தனவே தவிரக் குறையவில்லை. சுமார் பத்து வருஷ காலம் சிக்கல் வாசிகளிடையே தெய்விகக் குழந்தைபோல, தேவ கன்னிகை போல நடமாடி, கல்லி கல்லியாகப் பேசிக் கொண்டு, குழையக் குழையச் சிரித்துக்கொண்டு எல்லோர் உள்ளங்களையும் கொள்ளைகொண்ட வள்ளி அந்த ஊரை விட்டுப் புறப்பட்டபோது ஊரே துக்க சாகரத்தில் ஆழ்ந்தது, சகுந்தலையைப்பிரிந்த கண்ணுவர் ஆசிரமமும் வனமும்போல.

கால கதியால் அந்திய நாட்களில் மார்க்கசகாயத்திற்குக் காரணமின்றிச் சில பேர் விரோதிகள் ஆனார்களே தவிர, மற்றவர்கள் எப்போதும் போல்தான் இருந்தார்கள். தவிர, அந்த விரோதிகளும் வள்ளியின் பிரிவைத் தாங்காது தவிக்கத்தான் செய்தார்கள். விரோதம் மார்க்கசகாயத்தினிடமே தவிர வள்ளியிடம் இல்லையே!

தொட்டில் பழக்கம் இடுகாடு மட்டில் என்பது போல வள்ளி ஊர்விட்டு ஊர் வந்தும் அப்படியேதான் நடந்து கொண்டாள். கும்பகோணத்தில் சில மாதங்களே வசித்தாள். அதற்குள் அங்கே தெருவில் உள்ள அத்தனை பேருடைய அன்பையும் கவர்ந்தாள். நாளுக்கு நாள் தனக்கு வயதாகிறது, அதற்குத் தக்கபடித் தன் போக்கையும் மாற்றிக் கொள்ளவேண்டும் என்பன போன்ற உணர்ச்சிகள் அவளுக்கு ஏற்படவில்லை. ஊரில்

இருப்பவர்களெல்லாம் அண்ணு, அண்ணி, அக்கா, அத்தான், மாமன், மாமி, அப்பன், சிற்றப்பன், பெரியப்பன், அம்மா, சின்னுத்தா, பெரியாத்தா, தாத்தா, அப்பாயி.... இப்படி ஏதாவது உறவுகள்.

"....என்ன தங்கச்சி, இப்படி எல்லார் கிட்டேயும் ஏதாவது முறை வச்சுக் கூப்பிட்டு உறவு கொண்டாடறியே; வயசாச்சு. கொஞ்சம் அடக்க ஒடுக்கமா இருக்கப் பளகிக்க வாண்டாமா?" என்பாள் தாய்.

"உனக்குத் தெரியாதம்மா. சங்கீதக்காரங்க அப்படியெல்லாம் இருந்தா முடியாது. நாலு பேரும் வேணும். நாலுபேர் கிட்டேயும் நெருங்கிப் பழகணும். அதுதான் நல்லது. அடக்கம் அடக்கம்னு யாரைக் கண்டட்டும் அடுக்களையிலே போய்ப் பதுங்கிட்டா என்ன ஆவும்?"

இதுதான் வள்ளியின் பதில். மகளின் சாதுரியப் பேச்சிலே சொக்கிப் போவாள் தாய்.

திருச்சியிலும் வழக்கம் போலத்தான் நடந்து கொள்ளத் தலைப்பட்டாள் வள்ளி. வள்ளியின் போக்கைக் கண்ட இளம் வயதினரான சங்கீதக்காரர்கள் ராகவனைத் தூக்கிவைத்துப் பேசிக் கிண்டல் செய்தார்கள். ராகவன் இயற்கையில் நல்ல பிள்ளைதான், சம்பந்தம்பிள்ளை சொன்னது போல. ஆனல் நண்பர்களின் கிண்டல் மொழிகளில் பூத்த உணர்ச்சிகளால் அவன் தலை கிறு கிறுத்தது. ஆரம்பத்திலே அவன் வள்ளியின் விஷயத்தில் நடந்து கொண்டதற்கும் பின்னர் ஏற்பட்ட மாறுதலுக்கும் மிகவும் வித்தியாசம் இருந்தது. இதை வள்ளி உணரவே இல்லை.

அதிகாலையில் எழுந்து கதவைத் தட்டி வள்ளியை எழுப்பிச் சாதகம் செய்யச் சொல்லிவிட்டுப் போவான் ராகவன். சில சமயம் சாதகம் செய்யும்போது, கூட உட்கார்ந்திருப்பான். காலை ஏழு மணிக்குக் கலெக்டர் வீட்டுக்குப் பாடம் சொல்லப்போகும் போதோ, பாடம் சொல்லி விட்டுத் திரும்பும்போதோ வள்ளிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான். மாலை மூன்று மணிக்கு ஒரு முறை வந்து பாடச் சொல்லிக் கேட்பான். இரவு ஏழு, எட்டு மணிக்கு ஒரு முறை. இப்படிக் கணக்கு வழக்கு இல்லாமல் சதா சர்வகாலமும் வள்ளியின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட ராகவன் ஆதியில் எவ்விதமான பிரதிப் பிரயோசனத்தையும் எதிர்பார்க்காமலே பாடு பட்டான். வாய் ஓயாமல், "அண்ணு, அண்ணு!" என்று அழைத்து உண்மை அன்புடனும் பக்தியுடனும் நடந்துகொண்ட வள்ளியின் விஷயத்தில் ராகவனுக்கு ஓர் இரக்கமும், வாத்சல்யமும் ஏற்பட்டுப் போயிருந்தன. காலக் கிரமத்தில் அவற்றையெல்லாம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கினர், அவனுடைய நாசகால நண்பர்கள்.

"ராகவன் கொடுத்துவைத்தவன்டா ஸாரதி."

"எதைக்கொண்டு அப்படிச் சொல்லறே நடராஜா?"

"எதைக் கொண்டா? ஒண்ணும் நம்பர் உருப்படி ஒண்ணு வலிய வந்து சிக்கி இருக்கே; அது போராதா? உனக்கும் எனக்கும் அப்படி ஏதாவது கிடைக்கிறதோ?"

"சேசே! அதென்னடா, பச்சைக் குழந்தை; அதைப்போய்........"

"ஆமாம்! பச்சைக் குழந்தைதான்! வாயிலே விரலை வச்சாக் கடிக்கத் தெரியாது! அடேயப்பா! பேசற

பேச்சும், புன் சிரிப்பும், கண் வெட்டும், தளுக்கும், குலுக்கும்........படுத்தற பாட்டிலே ஊரையே சுருட்டி மடக்கி விடும் போலிருக்கு........பச்சைக் குழந்தையாம் பச்சைக் குழந்தை !''

"இருந்தாலும் நடராஜா, உனக்கு இத்தனை வாய்த் துடுக்குக் கூடாது. அந்தப் பெண் என்னடான்னு, "அண்ணு, அண்ணு" ன்னு உசிரை விடறது. நீ இப்படி........''

"யாரடா இல்லேன்னு சொன்னது? நீயும் அண்ணு தான், நானும் அண்ணுதான்; தெருவோடே போகிற வீரப்பனும் அண்ணுதான். கிரியாம்சையிலே வரபோது 'அண்ணு'க்களின் தரம் மாறுமடா அப்பாவி! அதெல்லாம் பக்குவப் படுத்தி இருப்பான் ராகவன். அவன் என்ன சாமான்யப் பட்டவனு? குரு தட்சிணை வேறே என்ன?

இது ஒரு சமயத்துச் சம்பாஷணை. இதேபோல இன்னும் எத்தனையோ சமயங்களில் எவ்வளவோ விதவிதமான சம்பாஷணைகள்; பச்சை பச்சையான வார்த்தைகள்!

ஆரம்பத்தில் இதை வெகுவாகக் கண்டித்தான் ராகவன். எப்பொழுது பார்த்தாலும் இவர்கள் இப்படியே பேச ஆரம்பித்ததும் அவன் மௌனியாகிவிட்டான். நாளடைவில் அவர்களின், மேற் கூறிய விதமான சம்பாஷணைகளில் தனக்கொரு பெருமையை அநுபவிக்க ஆரம்பித்தான். வள்ளியை உன்னிப்பாய்க் கவனிக்கத் தலைப்பட்டான்.

அவளது அழகும் கடைந்தெடுத்தாற் போன்ற அங்க அமைப்புக்களும் சிறுகச் சிறுக அவனது கண்களுக்குப்

புது விருந்தை அளித்தன. அப்போது வள்ளியின் வயது பதின்மூன்று. ஆனால் பதினைந்து பதினாறு வயதுத் தோற்றத்தின் செழுமை இருந்தது. 'இவளை அநுபவிப்பவன் கொடுத்து வைத்தவன்தான்' என்று எண்ணினான்; பெரு மூச்செறிந்தான்.

"நண்பர்கள் வெறுமெனக் கிண்டல் செய்கிறார்கள். உண்மையில் ஒன்றும் நடைபெறவில்லை. இவள் நமக்கு என்னத்தை வாரிக் கொடுத்து விடப்போகிறாள்? எதற்காக நாம் இரவு பகலாக இப்படிப் பாடுபட வேண்டும்? ஒரு பாவமும் அறியாமல் நண்பர்களின் கேலிக்குப் பாத்திரமாகி இருப்பதை விட........ நாம்........ஏன்........"

ராகவன் உள்ளத்தில் கறை ஏற்பட்டது. வள்ளி சம்பந்தமாக அங்கே இருந்தஇரக்கம், வாத்சல்யம், தூயஅன்பு ஆகிய அனைத்தும் மாயமாய் மறைந்து போயின. நடத்தையில் விபரீத மாறுபாடுகள், கண் சிமிட்டல், புன் சிரிப்பு, சிலேடைப் பேச்சு........இப்படியே போய்க் கொண்டிருந்தது ராகவனின் போக்கு. பாவம்! வள்ளி இவை ஒன்றையும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சுமார் ஒரு மாத காலம் படாத பாடுபட்டான் ராகவன். அனைத்தும் வீண்!

அவனுக்குக் கோபம் வந்து விட்டது. பாடத்திற்குப் போவதை நிறுத்தினான். அவள் அவனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டிற்கு ஓடி வந்தாள். லகுவில் சந்திப்புக் கிடைக்கவில்லை.

ஒரு நாள் தற்செயலாக இருவரும் சந்தித்தபோது ஜாடையாகத் தன் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தான் ராகவன். வள்ளி பாம்பை மிதித்தவள் போலானாள்.

புத்திசாலியல்லவா? ஜாடையாகவே, தான் சத்தியமாக அவனது தங்கை; இருவரும் சங்கீததேவதையின் மகனும் மகளும் என எடுத்துக் கூறிப் புத்தி புகட்டினாள்.

அவனது அறிவுக் கண் திறக்கவே இல்லை. மோக லாகிரியின் வெப்பம் தாளாமல் தவித்தான். அவளை அணையத் துடித்தன, அவனது உள்ளமும் உடலும். பதற்றமான நிலையில் என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் தாவி அவள் கரத்தைப் பற்றினான்.

'ஐயோ!' என்ற சத்தத்துடன் கையை உதறிக் கொண்டு ஓடினாள் அவள். அங்கே கிளம்பினவள் தன் வீட்டிலே வந்துதான் சரியான சுவாசம் விட்டாள்.

தலை விரி கோலமாக வந்த மகளைக் கண்டு விஷயம் அறியாது தவித்தாள் சீதம்மாள். தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு மெல்ல மெல்ல விஷயத்தைத் தாய்க்கு அறிவித்தாள் வள்ளி.

அவ்வளவுதான்; சீதம்மாள் அப்பொழுதே மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம்பித்தாள். மறு நாள் காலையில் கும்பகோணம். அங்கே வந்துதான் ஜலபானம் செய்தனர் தாயும் மகளும். மன அதிர்ச்சி தாளாமல் ஜுரம் கண்டது வள்ளிக்கு.

7. அரங்கேற்றம்

"அட! ராகவனு இப்படி நடந்து கொண்டான்? என்னுல் நம்பவே முடியவில்லையே! அத்தனை நல்ல பையன் அல்லவா அவன்?" என்று ஆச்சரியப் பட்டுப் போனுர் சம்பந்தம் பிள்ளை.

"நல்ல பிள்ளையாகத்தான் ஆரம்ப முதல் நடந்து கொண்டானும். வள்ளியும் சீதம்மாளுமே சொல்றுங்க. என்னவோ, எல்லாம் நம்ப போராத காலந்தான்" என்றுர் மார்க்கசகாயம்.

"கிடக்கிறது தள்ளுங்க. தலைக்கு வந்தது தலைப்பாவோடே போச்சு" என்று சமாதானம் கூறினுர் சம்பந்தம் பிள்ளை.

வள்ளிக்கு உடம்பு குணமாக மூன்று மாதங்கள் சென்றன. எனினும் பழைய 'மெருகு' சரீரத்தில் ஏற்படவில்லை. என்ன காரணத்தாலோ ஒரு மாற்றுக் குறைந்து போயிற்று. இந் நிலையில் அவள் புஷ்பவதியானுள். முன்னெல்லாம்போல் மனம் போனபடி எந்த இடத்திற்கும் செல்லக் கூடாது, எல்லாருடனும் பேசக்கூடாது எனச் சீதம்மாள் கூறினுள். மார்க்கசகாயமும் அதை ஆமோதித்தார். வள்ளிக்கும் அது நியாயம் என்றே பட்டது. அடங்காத மனத்தையும், சுபாவத்தையும் அடக்கி மாற்றிக் கொள்ளப் பாடுபட்டாள். இப்படி ஒரு மூன்று மாதங்கள். இதற்குமேல் இந்நிலை நீடிக்கவில்லை.

திடீரென்று ஜவுளி விலைகளெல்லாம் இறக்கம் கண்டன. வியாபாரிகள் சட சடவென்று 'ஸ்டாக்கு'களைத்

தீர்த்துக் கட்டி முதலைக் காண முயன்றார்கள். சம்பந்தம் பிள்ளையும் அதைத்தான் செய்யவேண்டி இருந்தது. ஒரே மாதத்தில் ஸ்டாக்குப் பூராவையும் தீர்த்துக் கடையை மூடிவிட்டுக் கிராமத்தோடு போய்ச் சேர்ந்தார். மார்க்கசகாயத்திற்குத் தம் அன்பளிப்பாக ஒரு நூறு ரூபாய் கொடுத்துச் சென்றார். அதை வைத்துக் கொண்டு சிறிது காலம் ஓட்டின மார்க்கசகாயம் வேறு ஏதாவது வேலை கிடைக்குமா என்று தேடி அலைந்தார்.

பட்டதாரிகளும், கொட்டாப்புளி வாலிபர்களும் வேலை கிடைக்காமல் திண்டாடும் காலத்தில் பல்லுப்போன கிழவருக்கு வேலை எங்கிருந்து கிடைக்கும்? சம்பந்தம் பிள்ளையின் விஷயம் வேறு. பால்ய சிநேகம். உபகாரம் செய்யவேண்டும் என்கிற அடிப்படையான எண்ணம். அதன் பேரில் ஏதோ பேருக்கு வேலை என்று கொடுத்திருந்தார். எல்லாரும் அப்படிச் செய்வார்களா?

வீட்டிலே உப்பு, புளி, அரிசி அனைத்திற்கும் தட்டு ஏற்பட்டு விட்டது. மூன்று ஆத்மாக்களின் யோக க்ஷேமம் நடைபெற வேண்டும். யோசித்து யோசித்து ஒரு வழியும் புரியாமல் திகைத்தார்கள். கடைசியில் வள்ளி சொன்ன யோசனைதான் எடுபட்டது. அதன் படி கிருத்திகையன்று சுவாமி சந்நிதியில் வள்ளியின் அரங்கேற்றத்திற்கு ஏற்பாடாயிற்று.

அரங்கேற்றம் என்று செய்துவிட்டால் ஏதாவது அறிந்த இடம் தெரிந்த இடங்களிலிருந்து சில்லறைக் கச்சேரிகள் வரும். ஜீவன சிரமம் சிறிது குறையும். இருக்கும் சரக்கை வைத்துக் கொண்டு முடிந்த வரையில் சமாளிக்கலாம். இடையே பல வித்துவான்களின் கச்சேரிகளைக் கேட்டும், இன்னும் யாரிடமாவது கெஞ்சிக் கூத்

தாடிச் சிட்சை பயின்றும் முன்னுக்கு வரப் பாடுபடலாம். குடும்பம் இருக்கும் நிலையில் பூரணத் தேர்ச்சி பெற்றபிறகு தான் கச்சேரிக்குப் போவது என்று கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் தனக்காக எவ்வளவோ பாடுபட்ட வயது முதிர்ந்த பிள்ளையும், சீதம்மாளும் கூண்டோடு கைலாசம் போகவேண்டியது தான் என்று வள்ளி நினைத்தாள். தாயிடமும் தெரிவித்தாள். சீதம்மா ளுக்கு இதில் இஷ்டமே இல்லை. 'அரை குறை வித்தை யோடு அம்பலமேறினால் பெயர் கெட்டுவிடுமே! அப்புறம் ஆயிரந்தான் விஷயங்களை அறிந்து தெரிந்து நன்கு கச்சேரி செய்தாலும் பெயர் எடுபடாதே!' என்றெல்லாம் தயங்கினாள். வேறு வழியில்லை. முருகன் விட்ட வழி ஆகட்டும் என இருந்துவிட்டாள்.

குறிப்பிட்ட தினத்தில் அரங்கேற்றம் நடந்தது. நல்ல கூட்டம். சற்றும் பயமோ லஜ்ஜையோ இல்லாமல் பாடி னாள் வள்ளி. பக்க வாத்தியங்கள் சுமார்தாம். அதை யெல்லாம் லட்சியம் செய்யாமல் ராஜ பாட்டையில் சஞ்சாரம் செய்தது அவளது அற்புதமான சாரீரம். திவ்யமான உருப்படிகள். எல்லாம் சரிதான். ஆனால் ஒரு கச்சேரியின் முழு அம்சமும் அதில் இல்லை. ராகம், ஸ்வரம் முதலிய அம்சங்களில் குறைகள். எப்படியோ ஒரு மூன்றுமணி நேரத்தை ஒப்பேற்றிவிட்டாள்.

"கிருத்திகை அன்று ஒரு பெண் பாடினாளே, கேட் டாயா?"

"கேட்டேன். சாரீரம் தேவலை. தோற்றம், சில் லறை உருப்படிகள் எல்லாம் தேவலை. ஆனால் முக்கிய மான சரக்குப் பூஜ்யம்....யார் அந்தப் பெண்?"

"அதுதான் அப்பா, கும்பகோணம் கோதண்டராமஸ்வாமி கோவில் தெருவிலிருக்கிற மார்க்கசகாயம் என்பவரின் பேத்தி. வள்ளி என்று பெயர் வீட்டிலே. கச்சேரிக்காக **நவநீதம்** என்று வைத்துக் கொண்டிருக்கிறாள். நல்ல பெண். பாவம், ஏழை!"

அந்த வட்டாரங்களில் அரங்கேற்றத்திற்குப் பின் சில நாட்கள் வரையில் இப்படிப் பல மாதிரியான பேச்சுக்கள் எழுந்தன. போஷித்தவர்; சிலர். தூஷித்தவர் பலர். எப்படியானுலென்ன? நவநீதத்திற்குக் கச்சேரிகள் வந்து கொண்டிருந்தன.

சுற்றுப்புறங்களில் நடைபெறும் சுமாரான கல்யாணங்கள், கோவில் உற்சவங்கள் முதலியவைகளில் பெயரளவில் கச்சேரி என்று வைக்க நினைப்பவர்களிடமிருந்து நவநீதத்திற்கு அழைப்புகள் வந்துகொண்டிருந்தன. சுமாரான வரும்படியும் ஏற்பட்டது. அது போதவில்லை, குடும்பச் செலவிற்கு. பொறுப்பு அவளுடையதாகிவிட்ட போது அடக்க ஒடுக்கமாக அடுக்களை வாசம் செய்தால் என்ன நடக்கும்? பழைய பாணியைக் கைக்கொண்டு எல்லோரிடமும் சரளமாகப் பழக ஆரம்பித்தாள்.

8. சஞ்சலமும் சந்தோஷமும்

ஆச்சேரிக்கு என்று நாலு இடங்களுக்குப் போய் வரத் தலைப்பட்டதும் நவநீதம் என்கிற பெயர் எங்கும் பிரபலமடைய ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்தே 'அரை குறைச்சரக்கு,' 'கத்துக் குட்டி' என்பன போன்ற வார்த்தைகளும் பரவலாயின. வருங்காலத்தைப் பாதிக்கக் கூடியஇந்த அவச் சொற்களை வெகு சீக்கிரத்திலே மறைத்துவிட வேண்டுமென்கிற எண்ணம் கனவிலும் நினைவிலும் ஏற்பட்டு நவநீதத்தின் மனத்தை அரித்தது.

தக்க குரு ஒருவரைத் தேடினுள். எங்கேபோனுலும் பணம்! பணம்!! பணம்!!! அது இல்லாத இடங்களில் மணம்!! மணம்!!!—அதாவது அந்தரங்கத் திருமணம்!

ஈசுவரா! இந்த இருவிதப் பிரயோசனத்தையும் அபேட்சிக்காமல் சங்கீதம் சொல்லிக் கொடுப்பவர்களே இப் பூமண்டலத்தில் கிடையாதா?....உண்டு. ஒன்று; ஸ்திரீகளில் வித்துவத்துவம் உடையவர்கள், இரண்டாவது வயது அறிவு இவைகளின் முதிர்ச்சியோடு போதுமான செல்வமும் படைத்த ஆண்வித்துவான்கள்....ஆனுல் அப் படிப்பட்டவர்கள் மனம் வைக்க வேண்டுமே!

கும்பகோணத்திலோ, சுற்று வட்டாரங்களிலோ சங்கீதத்தில் தேர்ந்த ஸ்திரீகள் யாரும் அப்போது கிடையாது. புருஷர்களில் மேலே கூறிய மூன்று அம்சங்களும் பொருந்தியவர்கள் நாலைந்து பேர்கள் இருந்தார்கள். நவநீதம் அவர்களைச் சரணடையத் தீர்மானித்தாள்.

முதல் முதலில் வித்துவான் சிவஸ்வாமி என்பவரிடம் போனாள். பாடச் சொல்லிக் கேட்டார். சந்தோஷப் பட்டார். க்ஷேமமாக இரு என்று ஆசீர்வதித்தார். "தள்ளாமை அதிகமாக இருக்கிறது, வேறு யாரையாவது பார்" என்று அனுப்பி விட்டார்.

அடுத்த படியாகச் சங்கீத சரபம் சங்கரலிங்கம். "எனக்கு ஒய்வு நேரமே கிடையாதே" என்று கையை விரித்தார் அவர். மூன்றாவதாகச் சொக்கலிங்கம்பிள்ளை. ஏதோ கோபத்தில் 'யாருக்கும் பாடம் சொல்வதில்லை' என்று சத்தியம் செய்துவிட்டதாகச் சொன்னார் அவர்.

பொறுமையுடன் நாலாவது நபரை நாடினாள் நவநீதம். அவரும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்த்தார். நவநீதம் விடவில்லை. அழுது தொழுது காரியத்தைச் சாதித்து விட்டாள்.

'பெரிய புள்ளி ஒன்றைப் பிடித்துவிட்டோம்; இனி நம் கலி தீர்ந்துவிடும்' எனக் குதூகலித்தாள் நவநீதம். பாவம், உலக நடப்பை அவள் என்ன கண்டாள்!

பிரதி தினமும் காலை ஏழு மணிக்கு அவர் வீட்டுக்குப் போய் வந்தாள். போய் மணிக்கணக்கில் காத்திருந்து வித்துவானின் தரிசனம் கூடக் கிடைக்காமல் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வாரத்தில் ஒருநாள் இரண்டு நாள் தப்பித் தவறி அவர் வீட்டிலிருந்தாலும் பயன்படத் தக்க முறையில்—நவநீதம் எதிர்பார்க்கிற முறையில்—எதுவும் நடைபெறுவதில்லை. 'முன் வழிகளே தப்பு. மறுபடி அடியிலிருந்து எல்லாமே சொல்லிக் கொள்ள வேண்டும்' என்று கூறி, 'இண்டர்' வகுப்பில் படிக்கிறவனுக்கு ஏ. பி. ஸி. டி. நேராக எழுதக் கற்றுக் கொடுப்பது போல ஏதோ மனம் போனவாறு சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

நவநீதத்திற்கு மனம் விட்டு, வாய் விட்டு எதையும் சொல்லவோ, கேட்கவோ பயம். அவள் பயப்படு கிறவளல்ல; கலகலப்பான பேர்வழிதான். ஆனால்,,...... ஏதாவது பேசப்போய் காரியம் அடியோடு கெட்டு விட்டால்?

நவநீதத்தின் வீட்டிற்கும், அந்த வித்துவான் வீட்டிற் கும் மூன்று பர்லாங்கு தூரம் இருக்கும். ஒரு குறுகிய சாலைவழி. அங்கே சில சமயங்களில் மனித நடமாட்டம் அதிகம் இருக்கும், சில சமயம் ஜன நடமாட்டமே இராது. ஜன சந்தடி இருக்கிறதோ இல்லையோ டீக்கடைகளும், வெற்றிலைபாக்குக் கடைகளும் திறந்தே இருக்கும். ஏதாவது வியாபாரம் - கடன் கட்டாகவாவது-செய்கிறார் களோ இல்லையோ, நாலுபேர் மேற்படி கடைகளின் முன் இருந்து கொண்டே இருப்பார்கள். அவர்கள் அநேகமாக ஒத்த வயதினராக—பதினைந்து முதல் முப்பது வரை உள்ளவர்களாக—இருப்பார்கள். கொட்டாவி விட்டுச் சோம்பல் முறித்துத் தில்லானாப் பாடிச் சீட்டியடித்து, மற்றும் ரசாபாசமாகச் சம்பாஷித்துப் பொழுதைக் கழிப்பதிலே இவர்களுக்குப் பரமப் பிரேமை. அதிலும் தெருவில் போவோர் வருவோரைப்பற்றி வம்பளப்பதிலே அதிக ருசி.

நவநீதம் முதல் நாள் அவ்வழியே போனபோது எல்லோரும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்தனர். மறு நாள் ஏதோ ஒரு சினிமாப் பாட்டைப் பாடினர். மூன்றும் நாள் சீட்டியடித்தனர். நாலாம் நாள் மட்ட ரகமான சம்பாஷணைகள். இதையெல்லாம் கவனித் தும் கவனியாதது போல் போய் வந்து கொண்டிருந்த நவநீதம் வீட்டிலே இதைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை.

சொன்னால் மறுநாள் முதல் பாடத்திற்கே போக வேண்டா மெனத் தடையுத்தரவு போட்டு விடுவாள் தாய் என்கிற பயந்தான். எனவே அந்த வித்துவானிடம் கேட்டுக் கொண்டு பாட நேரத்தை மாலை மூன்று மணியாக மாற்றிக் கொண்டாள்.

சில நாட்கள் சென்றன. அந்தக் கயவர்கள் எப்படியோ இதைத் தெரிந்துகொண்டு அந்த நேரத்திற்கு வந்து பாதையை முற்றுகையிட்டனர். மறுபடி பழைய உபத்திரவங்கள். மிக மிகப் பொறுமையாக நடந்து கொண் டாள் நவநீதம். இத்தனை கஷ்டங்களைச் சகித்தும் கிடைக் கக் கூடிய லாபம் ஒன்றுமில்லையே என்பதை எண்ணும் போதுதான் அவள் துக்கம் அளவைக் கடந்தது.

அப்படியும் இப்படியுமாக ஒரு மாதம் ஓடி மறைந்தது. அநுபவம் குறைந்த ஒரு வித்துவான் மனம் வைத்து ஓர் ஆறு மாதம் பாடுபட்டால் நவநீதத்தின் குறைகள் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். ஆனால் நடை முதலில் உள்ள முறையிலே போனால் ஆறு வருஷங்கள் ஆனாலும் ஒரு பயனும் ஏற்படாது எனத் தோன்றிற்று அவளுக்கு. பாடத்தை நிறுத்திக்கொள்வது என அவளாகவே தீர்மா னித்தாள். ஆயினும் ஏதோ போய் வந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் மாலை ஐந்து மணிக்கு நவநீதம் வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்கையில், ஒரு சிறுவன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து அவளிடம் நீட்டினான். அதைக் கையில் வாங்காமல், 'என்ன, ஏது, யார் கொடுத்தது?....' என்றெல்லாம் கேட்டுக்கொண்டே போய்க்கொண்டிருந் தாள் நவநீதம்.

மின்னல் வேகத்தில் சைகிள் ஒன்று வந்து அவளைச் சமீபித்து நின்றது. அதிலிருந்து சுமார் இருபத்

தைந்து வயதுடைய வாலிபன் ஒருவன் இறங்கினான். இறங்கினவன் கணமும் தாமதியாமல் சிறுவன் கையி லிருந்த கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, அவன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை கொடுத் தான். பையன் யமலோகம் போய்த் திரும்பி வந்தான். ஓவென்று அழ ஆரம்பித்தான். 'இதைக்கொடுத்து அனுப் பியது யார்?' என்று வினவினான் வாலிபன். சிறுவன் டீக்கடையைச் சுட்டிக் காட்டினான். வாலிபன் அவனையும் இழுத்துக் கொண்டு டீக்கடையை நோக்கி விரைந்தான்.

நவநீதத்திற்கு அங்கே நிற்கவும் மனமில்லை, போகவும் மனமில்லை. இருதலைக்கொள்ளி எறும்பு போலத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே மெல்ல நடந்தாள். அப்படித் திரும்பிப் பார்த்தபோது, டீக்கடையின் எதிரில் ஒரு காட்சியைக் கண்டாள். அவள் மெய் சிலிர்த்தது.

சைகிளில் வந்த வாலிபன் தன் காலில் அணிந்திருந்த பூட்ஸைக் கழற்றிக்கொண்டு டீக்கடை முன் ஒருவனை இழுத்துப் போட்டு அடித்துக்கொண்டிருந்தான். மனம் கொண்டமட்டிலும் அடித்து முடிந்ததும் அங்கிருந்த மற்றவர்களையும் பார்த்து ஏதோ வாயில் வந்தபடி இரைந்து காறி உமிழ்ந்தான். காலிக்கூட்டம் மெல்லக் கலைந்தது. வாலிபன் சைகிளில் ஏறிச் சென்றுவிட்டான். நவநீதம் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். அன்றோடு அவளது வித்தியாப்பியாசமும் முற்றுப் பெற்றது.

புதுமோகத்தில் சடசட வென்று நாலு இடங்களி லிருந்து ஏதோ சில கச்சேரிகள் வந்தன. பிறகு சுத்த சூன்யமாகி விட்டது. வீட்டிலே வறட்சை பிடுங்கித்தின்றது. சங்கீதமும் பூர்த்தி பெறவில்லை. சம்பாத்தியத்திற்கும் வழி இல்லை. குடும்பம் தத்தளித்தது.

மிகவும் இக்கட்டான ஒரு சமயம். நவநீதம் காதில் அணிந்திருந்த கம்மல்களைக் கொண்டு போய்த் தவணைக் கடையில் வைத்துப் பணம் வாங்கிவரச் சென்றாள். கூடவே துணைக்குச் சீதம்மாளும் சென்றாள். கடையில் முதலாளி இல்லை. கணக்கப்பிள்ளை நகையை எடை போட்டுச் சீட்டெழுதிக் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கும்போது அங்கே ஒரு வாலிபன் வந்தான். அவனைக் கண்டதும் நவநீதம் வெட்கித் தலை குனிந்தாள்.

கணக்கன் வாலிபனிடம் விபரம் கூறிக் கம்மல்களை எடுத்துக் கொடுத்தான். அதைக் கையில் வாங்கிய வாலிபன் நவநீதத்தையும் சீதம்மாளையும் மாறி மாறிப் பார்த்து விட்டுச் சீதம்மாளை நோக்கி, "ஏனம்மா, இந்தத் தோடுகளைத் தவிர உங்களிடம் வேறு ஒன்றும் இல்லையா வைப்பதற்கு?" என்று வினவினான்.

கேட்கப்படும் ரூபாய்க்குத் தோடு பெறுமானம் இல்லை என்கிற நோக்கத்தில் அவன் அப்படிக் கேட்பதாக நினைத்த சீதம்மாள், "ஏன்? நல்ல தோடுங்களாச்சே!" என்று ஏதோ கூற வயெடுத்தாள். அதற்குள் முழங்கையால் தாயாரை இடித்து ஜாடை செய்துவிட்டு, "வேறு நகை இல்லிங்க" என்று ஒரே வார்த்தையில் கூறினாள் நவநீதம்.

"உம், சரி. நாலு இடங்களுக்குப் போறவங்க வர்றவங்களாச்சேன்னு பார்த்தேன். சீட்டும் எழுதியாச்சு" என்று முனு முனுத்தான் வாலிபன். பிறகு கணக்கனிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பும்படிக் கூறி விட்டு வேறு ஏதோ அலுவலில் ஈடு பட்டான். தாயும் மகளும் விடை பெற்றுச் சென்றனர்.

ஈட்டின் பேரில் வாங்கி வந்தது முப்பது ரூபாய். முடையான செலவுகள் அறுபது ரூபாய்க்கு மேல் இருந்தன. பணம் பஞ்சாய்ப் பறந்து போயிற்று. மறுநாள் தபாலில் சிதம்பரத்திலிருந்து ஒரு கச்சேரிக்கு ஆர்டரும் அட்வான்ஸ் ரூபாய் இருபதும் வந்தன. அட்வான்ஸ் தொகை வழிச் செலவுக்கு. தோடு மீட்கப் பணம்?

கம்மல் இல்லாமல் கச்சேரிக்கு எப்படிப் போவது? யார் யாரிடமோ இரவலுக்குப் போய் வந்தாள் நவநீதம். நல்ல கம்மல்கள் உள்ளவர்களுக்குக் கொடுக்க மனம் இல்லை. மனம் உள்ளவர்களிடம் நல்லதாக இல்லை; நவநீதத்தின் காதுக்குச் சரியாகவும் இல்லை. வெயில் நேரத்தில் அலைந்து திரிந்துவிட்டு வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள் அவள். எதிரே அந்தத் தவணைக்கடைக் கணக்கன் வந்து கொண்டிருந்தான்.

"உங்க முதலாளி ரொம்ப நல்லவர்தானே?"

"நல்லவர்தான்; என் ?"

"நேற்று ஒரு ஜதை கம்மல் அடகு வைத்து முப்பது ரூபாய் வாங்கிக்கிட்டுப் போனேமே, அந்தப்பணம் செலவழிஞ்சுபோச்சு. திடீர்ன்னுசிதம்பரத்திலிருந்துஒருகச்சேரி வந்திருக்கு. பாதிப்பணம் இப்பவும், பாக்கி கச்சேரிக்குப் போய் வந்த அப்புறமும் கொடுக்கிறேன் என்றால், நம்பி உங்க முதலாளி கம்மல்களைக் கொடுப்பாங்களா?"

சிறிதுநேரம் யோசித்தான் கணக்கப்பிள்ளை. பிறகு, "சொல்லிப் பார்க்கிறேன்" என்றான்.

"என்னவோ; நேத்து அவர் பேசினதைப் பார்த்தா செய்வார்னு தோணுது...."

"ஓ! அவரைத்தான் முதலாளின்னு நினைச்சிருக்கீங்களா? அவரு முதலாளியோட தம்பி. முதலாளி வேறே ஒருத்தர். நேத்து நீங்க பார்த்தவர் இருந்தா அட்டி இல்லாமெக் கொடுத்துடுவாரு. அவர் தஞ்சாவூர் போயிருக்கார். இந்த ரெயிலிலே வரணும். வந்தூட்டா ரொம்ப நல்லது. இல்லாட்டாலும் பாதகமில்லே. இவரையே கேட்டுப் பார்க்கலாம். நீங்க எப்போ புறப்படணும்?"

"நாளைக் காலையிலே."

அப்போது அந்த வழியாகத் தடதட வென்று குதிரை வண்டிகளும் மாட்டு வண்டிகளும் வந்தன. அவை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து, மேற்கேயிருந்து வந்தவர்களை ஏற்றிக்கொண்டு வருபவை.

ஒரு குதிரைவண்டி இவர்களைச் சமீபத்தபோது அதனுள்ளிருந்த ஆசாமியைத் தற்செயலாகப் பார்த்தாள் நவநீதம். உடனே தலை கவிழ்ந்தாள்.

கணக்கனும் இதைக் கவனித்தான். வண்டி சென்றது.

சிரித்துக் கொண்டே, "உங்கள் காரியம் பழந்தான்" என்றான் கணக்கன்.

"அப்போ இதோ போய்ப் பணத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினாள் நவநீதம்.

"வேண்டாம். சாயங்காலம் ஐந்து மணிக்குக் கடைக்கே வந்து விடுங்கள். அப்போ பெரிய முதலாளி கூட இருக்க மாட்டார்" என்று சொல்லிப் போய் விட்டான் கணக்கன்.

மாலை நாலு மணி இருக்கும். வெளியில் செல்வதற்காக உடுத்துக் கொண்டு இருந்தாள் நவநீதம். தெருவில்

கணக்கனின் குரல் கேட்டது. ஓட்டமாக ஓடி வந்தாள். வரும்போதே பதினைந்து ரூபாய் பணத்தையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கணக்கன் கம்மல்களைக் கொடுத்து, "பாதிப்பணம் தேவை யில்லையாம். சௌகரியப் பட்டபோது முழுப் பணத்தையும் கொண்டுவந்து கொடுக்கச் சொன்னாரு. கம்மல் உங்களிடமே இருக்கட்டும்னு சொல்லச் சொன்னாரு" என்றான்.

"யார் சொன்னது?" என்று ஆவலுடன் கேட்டாள் நவநீதம்.

"சின்னவருதான்" என்றான் கணக்கன்.

அநாவசியமாக, "அவரு பெயரென்ன?" என்று கேட்டாள் நவநீதம். "கிருஷ்ணன்" என்று கூறி விடை பெற்றுச் சென்றான் கணக்கப்பிள்ளை.

கம்மல் கிடைத்த உற்சாகத்திலோ, அது கிடைத்த முறையில் உள்ள இனிப்பிலோ, அல்லது கச்சேரி கிடைத்த மகிழ்ச்சியிலோ அளவுகடந்த குதூகலத்துடன், "கிருஷ்ணா நீ பேகனேபாரோ" என்ற பாட்டைப் பாடிய வண்ணம் குதிபோட்டுக் கொண்டு உள்ளே சென்றாள் நவநீதம்.

9. கிருஷ்ணன்

சிதம்பரத்திலே ஒரு பிரபலஸ்தர் வீட்டிலே கல்யாணம். ஏற்பாடுகள் மிகவும் பலம். பணச் செலவு ஏராளம். இவ்வளவுக்குக் கச்சேரி மிகவும் சாமான்யம். "நல்ல பாடகர்கள் கிடைக்க வில்லையா? 'கத்துக்குட்டி' என்று சிலரால் கூறப்படும் நவநீதத்தைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?" என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

இது நவநீதத்திற்கே புரியாத புதிராக இருந்தது. "ஏதோ குருட்டு அதிருஷ்டம்! தட்டுக்கெட்ட சான்ஸ்! முருகன் செயல்...." என்றெல்லாம் எண்ணிக் கொண்டாள் அவள்.

இரவு ஏழுமணி இருக்கும். "எப்போ வருவாரோ!" என்ற பாட்டை ராகமாலிகையாகப் பாடிக் கொண்டிருந்தாள் நவநீதம். பந்தலுக்கு எதிரில் குதிரைவண்டி ஒன்று வந்து நின்றது. கிருஷ்ணன் இறங்கி வந்தான். கல்யணக்காரர்கள் பிரமாதமாக உபசரித்தார்கள். உபசாரம் முடிந்தபின் ஒருவர் கிருஷ்ணனின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து மேடையருகில் உட்கார்த்தி வைத்து, "கேளப்பா. நீ ஏற்பாடு செய்த கச்சேரியல்ல? நல்லாக் கேளு" என்று கூறிச் சென்றார்.

அந்தவார்த்தைகள் நவநீதத்தின் செவிகளில் விழுந்தன. ஒரு நிமிஷம் உடம்பெல்லாம் புல்லரித்தது. நன்றியுடன் கிருஷ்ணனை நோக்கினாள். அதே சமயம் அவனும் அவளை நிமிர்ந்து பார்த்தான். ஒரு வினாடி. இருவர் கண்களும் பேசிக்கொண்டன. அது முதல் அவளது பாட்டில் ஒரு

மாறுதல். அது எத்தகையது? அதைப்பற்றி ரசிகர்களைத் தான் கேட்கவேண்டும்.

'ஓர் அரிய சந்தர்ப்பம்!' என அடிக்கடி விளம்பரங்களில் காண்கிறோம். அப்படிப்பட்ட அரிய சந்தர்ப்பத்தை நேரிலே அடைந்து அநுபவித்தார்கள் நவநீதமும் கிருஷ்ணனும். அடிக்கடி நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள். நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டார்கள். இருவரும் உணர்ச்சி வசமானார்கள்.

ஒன்பது மணிக்குக் கச்சேரி முடிந்தது. பதினொரு மணிக்கு ரெயில். நவநீதமும் அவளைச் சேர்ந்தவர்களும் அந்த ரெயிலில் பிரயாணமானார்கள். கிருஷ்ணனும் அதே ரெயிலில் அவர்கள் ஏறியிருந்த பெட்டியிலேயே பிரயாணமானான்.

கொஞ்சம் கொஞ்சமாக நவநீதம்-கிருஷ்ணன் உறவு நெருங்கிவந்தது. சிதம்பரத்தில் எதிர்பார்த்ததற்குமேல் அதிகமாகச் சம்மானம் செய்தார்கள். இருநூறு ரூபாயை முழுசாகப் பார்த்த சீதம்மாள் பெரிதும் உளமகிழ்ந்தாள்.

'இன்னும் எட்டு நூறுதானே? என்னைக்காவது அதுவும் நடந்து விடும்' எனத் தைரியம் கொண்டாள். அந்தக் கச்சேரி கிடைக்கக் காரணகர்த்தா கிருஷ்ணன்தான் என்பதை மகள் மூலம் அறிந்ததும் கிருஷ்ணனிடம் அளவு கடந்த பிரீதி கொண்டாள். மறுநாள் தாயும் மகளுமாகப் பணம் கொடுக்கத் தவணைக் கடைக்குப் போனபோது அங்கே கிருஷ்ணனும் இல்லை, கணக்கனும் இல்லை. பெரிய முதலாளி மட்டும் உட்கார்ந்திருந்தார். "என்ன சமாசாரம்?" என்று வினவினார்.

கொடுக்கல் வாங்கலில் சிக்கல் இருப்பதால் கிருஷ்ணன் இருக்கக் கூடிய வேளையில் வரவேண்டுமென்றுதான்

மாலை ஐந்து மணிக்கு வந்தாள் நவநீதம். விபரீதமாக அங்கே அவனும் இல்லை, கணக்கனும் இல்லை. பேசாமல் திரும்பிவிட நினைத்தாள். அதற்குள் கடைக்காரர், "என்ன சமாசாரம்?" என்று கேட்கவும் வெள்ளையுள்ளம் படைத்த சீதம்மாள், "முந்தாநேத்து ஒரு ஜதை கம்மல் வச்சு...." என்று ஆரம்பித்தாள். கடை முதலாளி நிமிர்ந்து இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தபடியால் ஜாடை செய்யவும் நவநீதத்திற்கு வசதி இல்லை. கணக்கைப் புரட்டினார் கடை முதலாளி.

"நேத்தேதான் பணம் கொடுத்துக் கணக்குத் தீர்த்துக் கம்மலையும் வாங்கிக்கிட்டுப் போய்ட்டீங்களே, அப்புறம் என்ன?" என்றார்.

விழித்துக்கொண்டாள் நவநீதம். தாயை முந்திக் கொண்டு, "அதில்லை. அதே கம்மல் மேலே இப்போ கொஞ்சம் பணம் வேண்டியிருக்குங்க" என்றாள்.

"நேரமாய்ப் போச்சு. காலையிலே வாங்க" என்று கூறிவிட்டுக் குனிந்து வேறு அலுவலைக் கவனிக்கலானார் முதலாளி.

விபரம் புரியாத இந்த விஷயத்தில் ஏதோ மர்மம் இருப்பதாக எண்ணிய சீதம்மாள், தன் மகள்மீது என்றும் இல்லாமல் சிறிது ஆத்திரம் கொண்டாள். வீட்டிற்கு வந்ததும், "என்ன தங்கச்சி இதெல்லாம்? பெரிய ஆளா ஆய்ட்டே போலே இருக்கே?..........." என்றாள்.

அவளுக்கு விபரம் கூறி விளங்க வைப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது நவநீதத்துக்கு.

கிருஷ்ணனின் அன்பையும் ஆதரவையும், பெருந்தன்மையையும் வெகுவாகக் கொண்டாடினாள் சீதம்மாள்.

ஆனாலும் அந்த முப்பது ரூபாயையும் உடனேயே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று துடித்தாள். நாணய விஷயத்தில் என்றுமே அவள் அப்படித்தான்.

ஒருநாள் தெருவோடு போய்க்கொண்டிருந்தான் கிருஷ்ணன். வாசலில் நின்றுகொண்டிருந்த சீதம்மாள் அவனை அடையாளம் கண்டுகொண்டு, "தம்பி! ஒரு வார்த்தை" என்றாள். கிருஷ்ணன் வந்து உட்கார்ந்தான்.

சீதம்மாள் முப்பது ரூபாய் பணத்தையும் ஒரு மாத வட்டியையும் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள். கிருஷ்ணன் சிரித்தான்.

"பணத்தை வாங்கிக்கறேன். ஆனால் இப்ப வேண்டாம். கொஞ்சம் சௌகரியமான நிலைமை ஏற்பட்ட அப்பறம் கொடுங்க" என்றான்.

"அப்படிப் பாத்தா இந்த ஜன்மத்திலே உங்க பணத்தைத் திருப்பித் தரமுடியாது" என்றாள் சீதம்மாள்.

"அப்படியெல்லாம் நினைக்காதீங்க. ஆண்டவன் கண் பார்த்தா வெகு சீக்கிரத்திலேயே நல்ல நிலைமை ஏற்பட்டுடும்'' என்று கிருஷ்ணன் கூறும்போது, "தெய்வம் மனித ரூபத்திலே'' என்று அடிக்கடி எங்க தாத்தா சொல்லுவாங்க. ஆண்டவன் கிருபையெல்லாம் உங்க மூலமாகத்தான்" என்று சொல்லிக் கொண்டே அங்கே வந்தாள் நவநீதம். பிறகு சிறிது நேரம் ஏதேதோ பொது விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"தங்கச்சி, நல்லதா ரெண்டு பாட்டுப் பாடேன். தம்பி கேக்கட்டும்" என்றாள் சீதம்மாள்.

நவநீதம் கிருஷ்ணனை நோக்கினாள். அவனும் புன் முறுவலுடன் அவளைப் பார்த்தான். சீதம்மாள் கூடத்திற்குச் சென்று ஜமுக்காளத்தை எடுத்து விரித்தாள். நவநீதம் தம்பூராவை எடுத்து வைத்துக்கொண்டு பாட ஆரம்பித்தாள். கிருஷ்ணன் கூடத்திற்குச் சென்றான். அவன் பாட்டை அநுபவித்தானா அவளது எழிலை ரசித்தானா என்பதைப் பிரித்துக் கூற முடியாத நிலையில் அவள் அருகே நின்று அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மணி ஆறடித்தது.

"அடாடா! நான் அவசரமாக ஓர் இடத்திற்குப் போக வேண்டுமே!" என்று கிளம்பினான் கிருஷ்ணன். "வேத்துமெ பாராட்டாமெ அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருக்கணும் தம்பீ" என்று கேட்டுக்கொண்டாள் சீதம்மாள். அவள் மனத்தில் அவன் சம்பந்தமாக மரியாதையான ஒரு ஸ்தானம் இடம்பெற்றது

"கஞ்சி வரதப்பா!" என்று காஞ்சீபுரம் வரதராஜப் பெருமானை நினைத்து வாய்விட்டுக் கூவினானாம் ஒருவன். மூன்று நாட்களாகப் பட்டினி கிடந்த ஒருவன் இதைக் கேட்டு விட்டு ஆவலுடன், குடிக்கிற கஞ்சிதான் வருகிறதாக்கும்; யாராவது கொண்டு வருகிறார்களாக்கும் என்று, "எங்கே வரதப்பா?" என்று வாயைப் பிளந்தானாம். அது போல எப்போ சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறதென்று தவம் கிடந்தான் கிருஷ்ணன். அவனுக்கு நவநீதத்தின் மேல் நெடுநாளைய நோட்டம். அவள் அறியாமலே அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தான். அதனாலேதான் அன்று கடிதம் கொடுத்தனுப்பிய காலியையும், காலிகள் கூட்டத்தையும குறிப்பாகக் கண்டு பிடித்துக் கண்டிக்க முடிந்தது. அது ஒரு சந்தர்ப்பம். பிறகு கம்மல் ஈடு

வைக்கும் போது கருணை காட்டினது, பணம் பெறுமலே அதைத் திருப்பிக் கொடுத்தது, இருநூறு ரூபாய்க்கு ஒரு கச்சேரி ஏற்பாடு செய்து கொடுத்தது, தன்னுடைய சொந்தப் பணத்தைக் கடைக்கு நவநீதத்திற்காகக் கட்டினது—இப்படிச் சில காரியங்களைச் செய்து அவர்களின் மனத்தைக் கவர்ந்த கிருஷ்ணன் மேற் கூறியபடி எங்கே என்று காத்துக் கிடந்தான். சீதம்மாள் கடை வாயால் ஒரு வார்த்தை சொன்னுள். அவ்வளவுதான்; அது முதல் அடிக்கடி அங்கு வந்து போகத் தலைப்பட்டான் அவன்.

அவன் அவளைக் காதலித்தான். அவள்? அவளைப் பற்றி ஒரு முடிவும் கூற முடியவில்லை. அவள் ஒரு சங்கீதத் தொழிலாளி. வெள்ளை உள்ளத்துடன் பச்சைக் குழந்தை போல் நடந்துகொள்பவள்.

அவள் வீட்டிற்கு வருகிறவர்கள் எத்தனையோ பேர். இளம் காளைகள் தாம் அதிகம் அங்கே நடமாடினர். எல்லோரையும் அவள் 'அண்ணு' என்றே முறையிட்டு அழைத்தாள். எல்லோரிடமும் ஒரே மாதிரியான கலகல வென்ற பேச்சு, சிரிப்பு, விஷமம், வேடிக்கை முதலியன. ஒருவரிடம் அந்தரங்கம்; ஒருவரிடம் மேல் வார்த்தை என்பன போன்ற பேதாபேதங்கள் அவளிடம் இல்லை. இதனுல் அவள் யாரை நேசிக்கிறுள், யாரை நேசிககவில்லை என்பதையே புரிந்து கொள்ள முடியாத நிலையில், 'காதல்' என்ற விஷயத்தைப் பற்றி என்ன கண்டு பிடிக்க முடியும்?

காலப் போக்கிலே சரீர வளர்ச்சி, அங்க பாரங்கள் முதலியன ஏற்பட்டன. ஆனுல் அதற்காக அவளிடம் எவ்வித மாறுபாடும் இல்லை. ஏழெட்டு வயதுச்

சிறுமியாக இருந்தபோது எப்படி நடந்து கொண்டாளோ அப்படியேதான் நடந்து கொண்டாள் இன்றும்.

அவள் சரீரத்தில் உணர்ச்சிகளுக்கு இடம் உண்டா, இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் சகஜமாக எல்லோர் மீதும் அன்புடன் ஓர் ஆடவன் போலவே சர்வ சகஜமாகப் பழகினுள். அதிலிருந்து அவளது சரீர உணர்ச்சிகளை நிர்ணயிக்க முடியவில்லை. உள்ளம்? அதைக் கண்டது யார்? அவளுக்குத்தெரியும், அவளைப் படைத்த ஆண்டவனுக்குத் தெரியும்.

ஆனால் ஊகம் உள்ளவர்கள் ஒரே ஒரு விஷயத்தைக் கொண்டு அவள் மன நிலையை ஒருவாறு உணர இடம் இருந்தது. எல்லோரையும் அடிக்கு ஆயிரம் தடவை 'அண்ணு' என்று அழைப்பவள், கிருஷ்ணனை மட்டும் அப்படிக் கூப்பிடவில்லை. என்னவோ, ஒருகால் அவள் அவனைக் காதலிக்கிறுளோ என்னவோ!........

சந்தேகம் என்ன? காதலிக்கத்தான் செய்தாள்.

சீதம்மாள் வெகுநாள் வரையில் பொதுப்படையான ஓர் அன்பையும் கௌரவத்தையும் மட்டுமே அவன்பால் செலுத்திவந்தாள். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு சபலமான எண்ணம்: "கிருஷ்ணனைப் போல என்ன; அதிட்டமிருந்தா ஏன் கிருஷ்ணனே வாய்க்கப்படாது?.... ஆனு, அவன் பணக்காரன்; நாம் ஏழை. மேலும் வீட்டை விட்டு வாசலை விட்டு ஓடி வந்தவளோட மக...."

இப்படியெல்லாம் சலனங்கள். இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு, நவநீதமும் கிருஷ்ணனும் பழகும் தோரணையைக் கண்டதிலிருந்து மனத்தினுடே ஒரு சிறு சந்தேகம். மகளிடமிருந்து அதை எப்படி நிவர்த்தி செய்து

கொள்வது? வாய்திறந்து கேட்கவோ பயம். இருக்கட்டும்; போகப் போகப் பார்க்கலாம் என்று இருந்தாள்.

மார்க்கசகாயத்துக்கோ இதையெல்லாம் பற்றின சிந்தனையே இல்லை. 'எல்லோரும் இன்புற் றிருக்க நினைப் பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!' என்று இருந்தார். நாளுக்கு நாள் நவநீதமும் கிருஷ்ண னும் நெருங்கிக்கொண் டிருந்தனர். நாட்கள் கன வேக மாக ஓடிக்கொண் டிருந்தன.

10. ஆதரவற்ற கொடி

ஆரம்ப சிட்சை, கேள்வி ஞானம், முறையில்லாத சாதகம் இவைகளைக் கொண்டு எப்படிக் கச்சேரியில் பிரமாதமான புகழைப் பெற முடியும்? வளரும் பயிர் ஒரு நிலையில் கட்டை தட்டி நின்று விடுவது போலப் பூர்த்தி பெறாமல் இருந்த கலையைக் கொண்டு ஏதோ கச்சேரி என்கிற பெயரில் நாலு இடங்களுக்குப் போய் வந்துகொண்டிருந்த நவநீதத்துக்கு வரவரப் பெயர் மங்க ஆரம்பித்தது. 'தேங்காய் மூடிக் கச்சேரிகள்' கூடப் பஞ்சமாகி விட்டன. வீட்டிலே தரித்திரம் தலை விரித்து ஆடிற்று. ஏதோ கிருஷ்ணன் அவ்வப்போது சொற்பம் உதவி வந்தான். இதர நண்பர்களும் இயன்றதைச் செய்துவந்தனர்; அதெல்லாம் எந்த மூலைக்கு ஆகும்?

சீதம்மாளின் உள்ளம் நலிய ஆரம்பித்தது. பெருமூச்சுக்களும் சின்னச் சின்னப் புலம்பல்களும் இடையிடையே கண்ணீர்ப் பிரவாகமும் வெளிப்பட்டன. வெகு நாள்வரைக்கும் தனது பிறப்பு விவரம், தாயின் சங்கற்பம் முதலியவற்றை அறியாதிருந்த நவநீதம் சமீபத்தில் ஒரு முறை தாய் உடல்நிலை கெட்டுப் படுக்கையில் கிடந்த போது அவள் வாய்மொழி மூலமே அறிந்திருந்தாள். நிராதரவான நிலையில், 'நான் எப்படி என் தாயின் சங்கல்பத்தை நிறைவேற்றி வைக்கப் போகிறேன்' என ஏங்கித் தவித்தாள். தாய் வருத்தப்படும்போது மகளும், மகள் துயரப்படும்போது தாயும் ஒருவரை ஒருவர் சமாதானம் செய்துகொண்டனர். இருவரும் சேர்ந்து

வருந்தும்போது மார்க்கசகாயம் தலையிட்டு வேதாந்தம் பேசித் தேறுதல் கூறுவார். பாவம், அந்தக் குழந்தை உள்ளத்திலேதான் எத்தனை குழப்பங்கள்! எவ்வளவு சஞ்சலங்கள்!

'ஆம். அதுதான் சரி. கிருஷ்ணன் ஒருவரால்தான் நான் தலையெடுக்க முடியும். அவரை மணந்து, செல்வ நிலையை ஓரளவு, பெற்று சிறந்த வித்துவான் ஒருவரை நாடி, கேட்கும் பொருளைக் கொடுத்து வித்தையைப் பூரண மாக்கிக் கொண்டு, அம்மா இறப்பதற்குள் அவளது கோரிக்கையைப் பூர்த்தி செய்து வைத்துவிட வேண்டும். நல்லது; அவர் வரட்டும்; பளிச்சென்று கேட்டுவிடலாம்' என்று மனத்திலே தீர்மானித்துக்கொண்டாள் நவநீதம். கிருஷ்ணன் அந்தப் பக்கம் வரவே இல்லை, சோதனைபோல. விசாரித்ததில் அவன் ஊரிலே இல்லையெனத் தகவல் கிடைத்தது. ஒரு மாதத்துக்குப் பின் ஒரு நீண்ட கடித மும் கல்யாணப் பத்திரிகையும் வந்தன.

கிருஷ்ணன்தான் கடிதம் எழுதியிருந்தான். பத்திரி கையும் அவனுடைய கல்யாணப் பத்திரிகைதான். ஏதோ சுவீகாரம், உயில், சொத்து, சுதந்தரம், நிர்ப்பந்தம்.... இப் படி என்னவெல்லாமோ பிதற்றியிருந்தான்.

அவளது மனக் கோட்டை நின்ற நிலையில் ஒரு பெரிய இடியால் தாக்கப்பட்டுத் தகர்ந்து நிலத்தில் வீழ்ந்து துகள் துகளாகச் சிதறிப் போயிற்று. நம்பியிருந்த ஒரு மரமும் பெருங்காற்றில் விழுந்து அப்புறப்படுத்தப்பட்ட பின் அந் தக் கொடி எங்கே படரும்? என்ன செய்யும்?

விஷயம் அறிந்ததும் பெரிதும் வியாகுலமடைந்தாள் சீதம்மாள். மார்க்கசகாயம் சொன்னார்: 'இதோ பார்

சீதம்மா, எட்டாப் பழத்தை நினைச்சது தப்பு. அதன் பலன் இதுதான். நாம் இருக்கிற நிலையிலே இனிமேலே புள்ளெக்கிச் சங்கீதத்தை அபிவிருத்தி செய்து வைக்கிறது நடவாத காரியம். ஏதோ அபூர்வமா வந்துக்கிட்டிருந்த இரண்டொரு கச்சேரிகளும் ஒரே அடியா நின்னு பூடுச்சு. நமக்கோ வயசாயிடுச்சு. இன்னிக்கோ நாளைக்கோன்னு இருக்கு நம்ம நிலைமை. குழந்தையை இப்படியே கதி யில்லாமெ விட்டு விட்டுப் போறதைக் காட்டிலும் கண் ணிருக்கும்போதே, ஒருத்தன் கையிலே ஒப்படைச்சுட றது நல்லது. நம்ம நிலைமைக்குத் தகுந்தாப்பலே ஒருத்தன் அகப்படாமலா போயிடுவான்? ரெண்டு பேரும் சம்மதம் கொடுங்க; நாளைக்கே ஒரு நல்ல பையனைத் தேடிக் கொண்ணாந்துடறேன்."

நீண்ட பெருமூச்சுக்களைத் தவிர ஒரு பதிலும் கிடைக் கவில்லை; தாய், மகள் இருவரிடமிருந்தும். "யோசியுங்க, யோசியுங்க; நல்லா யோசிச்சுப் பாருங்க" என்று கூறி விட்டு அப்பாற் சென்றார் மார்க்கசகாயம். மகளின் நலத் தில் தாய்க்கு அக்கறைதான். ஆனால் தனது பிரதிக்ஞை வீணாகிறதே என்று வருந்தினாள். நவநீதமோ மார்க்கசகா யத்தின் யோசனையை ஏற்கவே இல்லை. தாயின் சங்கற் பத்தை நிறைவேற்றுவதிலே அவள் துடியாக இருந்தாள். கல்யாணம் அதைத் தடை செய்யும் என்பதோடு இரண்டு விஷயங்களால் அதை அவள் வெறுத்தாள். ஒன்று அவள் தந்தை பொன்னுசாமிபிள்ளை விஷயம், மற்றொன்று கிருஷ்ணன் போக்கு. இருவரின் போக்கிலிருந்தும் பொது வாக ஆடவரையும், குறிப்பாகக் கல்யாணத்தையும் வெறுத்தது அவள் உள்ளம்.

கிருஷ்ணன் திரும்பி வந்திருந்தான். அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்கிற செய்தி ஊரில் ஒரு

பெரும் புரட்சியை உண்டுபண்ணிற்று. கிருஷ்ணன் யோக்கியனுக்கு யோக்கியனாகவும் துஷ்டனுக்குத் துஷ்டனாகவும் ஊரிலே மிகுந்த செல்வாக்குடன் இருந்தான். நவநீதத்தை அவன் மணக்கப் போகிறான் என்ற வதந்தி ஊரில் பரவியதால் எவரும் அவள் வம்புக்குப் போகாமல் வாலைச் சுருட்டி மடியில் வைத்துக்கொண் டிருந்தனர். அவன் அடிக்கடி நவநீதத்தின் வீட்டுக்குப்போய் வந்ததனாலும், பேச்சு, வார்த்தை, நடவடிக்கைகளில் அவன் காட்டி வந்த பெரும் பரிவாலும் நவநீதம், கிருஷ்ணன், இருவரையும் தம்பதிகளாகவே ஊரார் தீர்மானித்து விட்டனர். அதோடு மட்டும் அல்ல; இருவரும் விஷய சுகங்களில்கூட ஈடுபட்டு விட்டதாக, நேரில் பார்த்தாற் போலப் பேசிக் கொண்டனர். சீதம்மாளும் நவநீதமும் செய்த மாபாவங்களில் இதுவும் ஒன்று போலும்!

ஊரிலுள்ள கயவர்களுக்குக் கிருஷ்ணனின் திருமணத்தால் குளிர் விட்டுப் போயிற்று. பழையபடி அவள் வீட்டையும் அவள் செல்லும் இடங்களையும் முற்றுகையிடத் தொடங்கினர். நவநீதத்தின் நிலை பரமசங்கடம் ஆகிவிட்டது. உள்ளம் ஒடிந்து போயிருந்த சீதம்மாள் மேலும் இடிந்து போனாள். நாளுக்கு நாள் அவளது உடல் ஒடுங்கிப் பரம கேவலமாகிக் கவலைப்படக் கூடிய நிலைக்கு வந்துவிட்டது.

சென்னையிலிருந்து சினிமாக் கம்பெனிக்காரர் ஒருவர் வந்து உள்ளூர் மனிதர் ஒருவரின் நௌிவு சுளுவால் கும்பகோணத்திலிருந்த பெண்களில் சிலரைச் சினிமாவுக்கு ஒப்பந்தம் செய்தார். உள்ளூர் ஆசாமி நவநீதத்தைப்பற்றிச் சினிமாக் கம்பெனியாரிடம் ஒரேயடியாகப் புகழ்ந்தார். எத்தனை ரூபாயானாலும் சரி, மனத்துக்குத் திருப்தியாக இருந்தால் ஏற்பாடு செய்துவிடுவது என்று தீர்மானித்தார்

முதலாளி. அந்தப் புரோக்கர் நவநீதத்தினிடம் தூது வந்தார். சீதம்மாளுக்குத் தன் மகள் சினிமா உலகில் பிரவேசிப்பதில் இஷ்டமில்லை. மார்க்க சகாயம் எதுவுமே கூறவில்லை. தாம் கூறுவது அவர்களுக்கு ஏறாது என்பது அவர் தீர்மானம். நவநீதம் யோசித்தாள். அவளுக்கும் அது விருப்பம் இல்லாத காரியந்தான். என்றாலும் கால தேச வர்த்தமானங்களை உத்தேசித்து ஒப்பந்தம் செய்து கொள்ளத் தீர்மானித்தாள்.

இந்த ஒரே ஒரு படத்தில் மட்டும் ஈடுபட்டுவிட்டு நிரம்பப் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டுவந்து மறு படி சங்கீதக் கச்சேரித் துறையில் ஈடுபடலாம் என்பது அவள் உத்தேசம். ஆனால் அதுகூட இஷ்டம் இல்லை, சீதம்மாளுக்கு. "சினிமா உலகம் கெட்டது. அதிலே பிரவேசிப்பவர் பரிசுத்தமாக இருக்க முடியாது. கெட்டுப் போவதில், கொஞ்சம் கெட்டால் மட்டும் பரவாயில்லையா?" என்று வாதாடினாள்.

நவநீதம், அவள் தாய் முதலியவர்களின் அபிப் பிராயத்தை அந்தச் சினிமாக் கம்பெனி முதலாளியிடம் தரகர் தெரிவித்ததும் முதலாளி தம் மனத்துக்குள் ஏதோ ஒரு முடிவைச் செய்துகொண்டு தரகருடன் நவநீதத்தின் வீட்டுக்கு வந்தார். சீதம்மாளிடம் பேசினார்.

நவநீதம் பாடினாள். பாட்டைக் கேட்டு மகிழ்ந்த முதலாளி, "சினிமாவில் நடிக்க அபிப்பிராயம் இல்லா விட்டால், 'பிளேபாக்' (குரல் இரவல்) கொடுப்பவர் ஆகலாம். அதில் எவ்விதக் கெடுதலும் இல்லை. நிறையப் பணம் தருகிறேன்" என்றார்.

இப்படிச் சொல்லி இவர்களைப் 'புக்' பண்ணிக் கொண்டு போய்விட்டால் அங்கே தம் ராஜாங்கந்தானே!

இஷ்டப்படிச் செய்து கொள்ளலாம் என்பது அவர் அபிப்பிராயம்.

சீதம்மாளுக்குக் 'குரல் இரவல்' விஷயம் புரியவில்லை. முதலாளி, தரகர், முதலாளியுடன் கூட வந்திருந்த தலையாட்டிகள் எல்லோரும் விளங்க வைத்தனர்.

சீதம்மாள் சம்மதித்தாள்; மார்க்கசகாயமும் சம்மதித்தார்; சினிமா முதலாளியின் குறி தவறவில்லை.

இதற்கு முன் 'புக்' செய்யப்பட்டவர்களெல்லாம் முன்பே சென்னைக்குப் போய்விட்டபடியால் அன்று கம்பெனி முதலாளியும் நவநீதம் முதலியவர்களும் சென்னைக்குப் பிரயாணப்பட்டனர். ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளவில்லை. அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்பது சீதம்மாளின் அபிப்பிராயம். கடைசிவரையில் அவளுக்குச் சந்தேகமே! அவள் சந்தேகம் வீண் போகவில்லை.

ஸ்டேஷனில் டிக்கெட் வாங்கும்போது நவநீதத்துக்கும் முதலாளிக்கும் மட்டும் முதல் வகுப்புக்கும் மற்றவர்களுக்கு மூன்றும் வகுப்புக்கும் வாங்கினர். இதை அறிந்த சீதம்மாள் ஆட்சேபித்தாள். நவநீதம் முதல் வகுப்பிலே பிரயாணம் செய்தால்தான் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது பார்ப்பவர்கள் அவளை மதிப்பார்கள் என்றார் முதலாளி.

"மதிப்பு அவள் குரலுக்கே தவிர உடலுக்கு இல்லை; ஆகையால் அவள் எங்களுடன் மூன்றும் வகுப்பிலேயே வரட்டும்; அல்லது எல்லோருக்கும் முதல் வகுப்பு டிக்கெட்டு வாங்குங்கள்" என்றாள் சீதம்மாள்.

அவளை அப்படியே கழுத்தைப் பிடித்து நெறித்து விடலாமா என்றிருந்தது முதலாளிக்கு. நவநீதத்தினிடம் முதல் வகுப்பு டிக்கட்டைக் கொடுத்து இஷ்டம் போல் செய்துகொள்ளும்படி கூறிவிட்டு முதலாளி முதல் வகுப்பில் போய் உட்கார்ந்துகொண்டார். ஏற்பட இருந்த ஏதோ பெருத்த ஆபத்தினின்றும் குழந்தையைக் காப்பாற்றிவிட்ட நினைப்புடன் மகளை அணைத்துக்கொண்டாள் சீதம்மாள். அவர்கள் மூன்றும் வகுப்பிலேதான் சென்றார்கள்.

தன்னந்தனியாக இரவு பூராவும் கண் விழித்துத் தாபத்துடன் பிரயாணம் செய்த முதலாளியின் உள்ளத்தில் நவநீதத்தின்பால் ஏற்பட்ட ஆசை மறைந்து சீதம்மாள் மீது பகை ஏற்பட்டு வளர்ந்தது. சென்னை சென்றதும் அவர்களைப் பல விஷயங்களிலும் கொடுமையாக நடத்தினர். எப்படியாவது நவநீதத்தைச் சீதம்மாளிடமிருந்து பிரித்துக்கொண்டு செல்ல அவர் பாடுபட்டார். சீதம்மாளோ பகல் இரவு எந்நேரமும் எங்கே சென்றாலும் நவநீதத்தின் நிழல்போல அவளைத் தொடர்ந்து நின்றாள்.

முதலாளியின் எண்ணம் கருகிற்று. கொடுமைகள் அதிகமாயின. ஒருவாறு எல்லாவற்றையும் ஊகித்துக்கொண்ட சீதம்மாள் மானத்தை மண்மீது போட்டால்தான் அங்கே புகழும் பொருளும் கிட்டும் என்று தீர்மானித்தாள். சாமான்களைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். முதல்நாள் இரவு முதலாளி நவநீதத்தினிடம் சற்றுத் தாறுமாறாக நடந்துகொண்டதே சீதம்மாளின் பரபரப்புக்குக் காரணம். அவ்வளவுதான்; மறுநாள் நவநீதம், சீதம்மாள், மார்க்கசகாயம் மூவரும் கும்பகோணத்தில் இருந்தனர்.

ஊரில் நாலு பேர் நாலுவிதம் பேசத்தான் பேசினார்கள்.

"திருச்சிராப்பள்ளிக்குப் போய் மகளுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்து அழைச்சுண்டு வந்தது போலத் தானே இருக்கும் சீதம்மாள் காரியமெல்லாம்?"

"ஆமாம், மானத்தை வித்தாவது வயிறு வளர்க்க அவளுக்கு இஷ்டமில்லை!"

"மகா மானம்! இவள்தான் கண்டுவிட்டாள் மானத்தை! மத்தவங்களெல்லாம் இல்லையோ? சினிமாவிலே எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர் பிழைக்கல்லையோ?...."

"அதெல்லாம் அவங்க அவங்க இஷ்டத்தைப் பொறுத்தது."

"நல்ல இஷ்டம். பெரிய பதிவிரதைதான். ஏன் வீண் பேச்சு? சீதம்மாள் இல்லாவிட்டால் நவநீதம் இத்தனை நாள் எவ்வளவோ பிரமாதமாக முன்னுக்கு வந்திருப்பாள். அவள் உள்ளவரைக்கும் அவளை உருப்படவிடமாட்டா...."

இந்தப் பேச்சுக்களில் சில சீதம்மாள் காதுக்கும் எட்டாமல் இல்லை. 'கிடக்கிறாங்க, அறியாதவங்க' என்று அனைத்தையும் ஒதுக்கிவிட்டு வளையவந்தாள் அவள். என்றாலும் தொட்ட காரியமெல்லாம் இப்படித் தோல்வி அடைகிறதே என்று மனத்தில் ஒருபுறத்தில் ஏக்கந்தான். இந்த ஏக்கமும் வறுமையும் தனது சங்கற்பம் பூர்த்தி பெறும் அறிகுறி சிறிதும் இல்லையே என்கிற துக்கமும் ஒன்றுகூடி அவளைப் படுக்கையில் தள்ளிவிட்டன. நாளுக்கு நாள் க்ஷீண தசை அடைந்தாள்; மரண தேவதை அவளை நெருங்கிக்கொண்டிருந்தது.

11. பிரிவும் துறவும்

தீபம் அணையும் சமயம். சிறிது மங்கிற்று ; உடனே படர்ந்து எரியத் தொடங்கிற்று. ஜ்வாலை வீசிற்று: மெல்லப் பேசத் தொடங்கினாள் சீதம்மாள்:

"கண்ணு, வள்ளி! வைத்தியரு சொல்றதுக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும். நான் போயிடப் போறது நிச்சயம். நீ....என்ன செய்யப் போறே?

" இந்த உலகம் சூதும் வாதும் நிறைஞ்ச உலகம். நீயோ கொஞ்சங்கூட நெஞ்சிலே கவடு இல்லாமெ நடக்கறவ. எப்படித்தான் பேர் சொல்லப் போறியோ! நான் தான் உன்னைக் கெடுத்து உருப்படாமெ செய்துட்டேன்னு சில பேர் நினைக்கிறாங்க, சொல்றாங்க. நான் கெடுத்தேனோ, நல்லதைச் செய்தேனோ; மத்தவங்க கெடுக்காமெ இது வரைக்கும் காப்பாத்திட்டேன். இனிமே உன்னை நீயேதான் கவனிச்சுக்கணும். தாத்தாவுக்கு வயசாய்ப் போயிடுச்சு. அவரை நம்பிப் பிரயோசனம் இல்லே.

"வள்ளி, நான் போறேன். எங்கேயோ பொறந்தேன்; எவ்வளவோ அருமை பெருமையா வளர்ந்தேன் ; எங்கேயோ புகுந்தேன் ; பட்ட கஷ்டம் கணக்கில்லை. நீ ஒருத்தி மட்டும் பொறக்காமே இருந்திருந்தா நான் எப்பவோ மடிஞ்சு போயிருப்பேன். ஏதோ ஆத்தரத்துலே சபதம் செய்துட்டேன். அது நிறைவேறிக் கண்ணாலே பார்க்காமலே கண்ணை மூடறேன். என் நெஞ்சு வேகிறது கஷ்டந்தான் ! ஆனாலும் ஒரே ஒரு நம்பிக்கை........ உன் ஆயுசுக்குள்ளேயாவது நீ என் சபதத்தைப் பூர்த்தி பண்ணிடுவேன்னு நெனக்கிறேன்...."

"கவலைப்படாதே அம்மா. பூர்த்தி பண்ணி வச்சுடறேன்" என்று அழுதுகொண்டே சொன்னாள் நவநீதம்.

"பூர்த்தி பண்ணறது ஒரு பக்கம் இருக்கட்டும். அதுலே எத்தனை அக்கறை காட்டறயோ அத்தனை அக்கறையோடு மோசம் போயிடாமல் இரு. ஆம்புள்ளெங்களை நம்பவே நம்பாதே! இனிமே பொம்புள்ளே ஜன்மமே வாண்டாம்னு முருகனண்டெ எப்பவும் முறையிடு....என்.... கண்ணு நான் போறேன். வள்ளி! என் வார்த்தைகளை மறந்துடாதே....என் சபதத்தை நிறைவேத்திவிடறயா? வள்ளி....வள்ளி...."

அவள் தொண்டை கம்மிற்று. ஒரு விக்கல். சுவாசம் தடுமாறிற்று. கண்கள் மிரண்டன. மார்பு விம்மி வடிந்தது. தலை சாய்ந்தது.

"அம்மா!...." என்று அலறினாள் நவநீதம். மேலே விழுந்து கதறினாள்; புழுப்போல் துடித்தாள்; முட்டிக் கொண்டாள்; மோதிக்கொண்டாள்; அரற்றினாள்; பிதற்றினாள்; "அம்மா! அம்மா!" என்று ஓலமிட்டாள். அவளது ஓலத்தால் சேர்தண்டராமஸ்வாமி கோயில் தெருவே கிடுகிடுத்தது. மார்க்கசகாயம் தம் கண்களைத் துடைத்துக்கொண்டு அவளைத் தேற்றினார். தேறுதல் ஏற்படுமா?

* * *

சீதம்மாள் மறைந்து ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் இரவு எட்டு மணிக்குக் குத்துவிளக்கின் எதிரில் உட்கார்ந்து முருகன் துதியைப் பாடிக்கொண் டிருந்தாள் நவநீதம்.

நிம்மதியற்ற அவள் மனத்துக்கு ஆறுதல் தரக்கூடியது—பட்டினி பசியால் பரிதவிக்கும் உடல் உள்ளம் இரண்

டுக்கும் சாந்தி அளிக்கக் கூடியது, கடன்காரர்களின் ஏச்சுக்களினால் நொந்து வாடிய இதயத்துக்குச் சமாதானம் தரக்கூடியது, "முருகா! முருகா! வள்ளி! வள்ளி!" என்று வாய் ஓயாது புலம்பிக்கொண்டு இங்குமங்கும் நடமாடிக் கொண்டிருந்த சீதம்மாளின் பிரிவால் சூன்யமடைந்திருந்த அந்த வீட்டின் பயங்கர நிலைமைக்குப் பரிகாரந் தரக்கூடியது - முருகன் துதி ஒன்றுதான். காலை, நடுப்பகல், மாலை, இரவு எந்நேரமும் அவள் அதையே பாடிக்கொண் டிருந்தாள். அவள் மனம் வேறு எதிலும் ஈடுபடுவதே இல்லை.

அன்றும் அதைப் பாடிக்கொண் டிருக்கும்போது யாரோ ஒருவன் பரபரப்புடன் ஓடி வந்து, "அம்மா, அம்மா!" என்று அழைத்தான். வள்ளி வெளியில் வந்தாள். அங்கே பேரிடிபோன்ற ஒரு செய்தி காத்திருந்தது, அவளுக்கு.

"உங்க வீட்டிலே இருந்தாரே ஒரு பெரியவரு, அவுரு கோவிலிலே சாமி கும்பிட்டுட்டுவர்ரப்போ, கோபுர வாசலிலே காலிடறிக் கீழே விழுந்துட்டாரு. ரவை நேரத்துக்கெல்லாம்....உயிரு போயிடுச்சு...."

நவநீதத்தின் மனநிலையை வருணிக்க வார்த்தைகளே இல்லை. பட்ட காலிலே படும் என்பது அவள் விஷயத்தில் முழு உண்மையாயிற்று. உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ஓடினாள். கோயிலுக்கு வெளியே நித்திரை செய்கிற தோற்றத்தில் கிடந்த மார்க்கசகாயத்தின்மீது விழுந்து, 'தாத்தா! தாத்தா!' என்று கதறி அழுதாள். ஊரார் தேற்றினர். மேற்கொண்டு ஆக வேண்டியவை எப்படியோ நடைபெற்றன. துக்கம் எல்லையைக் கடந்த போது நெஞ்சு கருங்கல்லைப் போலக் கடின நிலை பெற்றது.

"இதென்ன வள்ளி, நீ செய்யறதெல்லாம் கொஞ்சங் கூட நன்ருயில்லையே !"

அடுத்த வீட்டு அம்மாள் இப்படிக் கேட்டபோது அவள் சிரித்துக்கொண்டே சொன்னுள்.

"தப்பா ஒண்ணும் செய்யலையே! எல்லாம் சரியாத் தானே செய்யறேன்."

காதில் அணிந்திருந்த தோடு முதல் கை கழுவும் செம்புவரையில் சகலத்தையும் விற்ருள் நவநீதம். தேறின பணத்தைக் கொண்டு பைசா பாக்கியில்லாமல் கடன் பூராவையும் கொடுத்துத் தீர்த்தாள். கொஞ்சம் பணம் மிஞ்சக்கூட மிஞ்சியது. சற்று நிதானித்து யோசித்தாள். இதை வைத்துக்கொண்டு என்ன ஆகப் போகிறது என்றே தோன்றிற்று. அந்தச் சொற்பப் பணத்தையும் பிச்சைக்காரர்களிடம் மனம் போனபடி வாரி விட்டாள். உடுத்த துணியுடன் முருகன் துதிப் புத்தகத்தைப் கையில் எடுத்துக்கொண்டு யாரும் அறியாத வேளையில் வீட்டை விட்டு வெளியேறினுள்.

என்னதான் உடலைக் கன்ரு பின்ரு என்று அலங் கோலமாக்கிக் காயக்கிலேசப் படுத்திக்கொண்டும், பருவ எழில் இலகுவில் மாறவில்லை, மறையவில்லை. காண்பவ ரெல்லாம் அவளைக் கணம் உற்றுப் பாராமல் இருப்ப தில்லை. அதை அவள் பொருட்படுத்தவில்லை; கருமமே கண்ணுயினுள்.

பரதேசியாக ஊர் ஊராகச் சென்றுகொண் டிருந் தாள். ஒவ்வோர் ஆலயமாகச் சென்று சுவாமி சந்நிதியில் நின்று மனமுருகிப் பாடுவதும் கிடைத்த ஆகாரத்தை உட் கொள்ளுவதுமாக மனம் போனபடி சென்றுகொண்

டிருந்தாள். ஆரம்பத்தில் சிற்சில இடங்களில் அறிந்தவர் தெரிந்தவர் கண்ணில் பட்டனர். அவளது போக்கைத் திருப்பப் பாடுபட்டனர். ஒன்றும் நடைபெறவில்லை.

பழகின ஊர்களைத் தாண்டிச் சென்றதும் உபத்திரவங்கள் குறைந்தன. தோற்றமும் மெள்ளமெள்ள மாறுதல் பெறத் தொடங்கிற்று. பிறகு அவளுக்கு நிலைமை கடினமாக இல்லை. 'யாரோ, பால துறவி' என்கிற பெயர் மாறி, 'துறவி' என்கிற பெயர் கிட்டியபோது சுமார் முப்பது வயதிற்கு மேற்பட்ட வயதைக் காட்டிற்று, அவள் தோற்றம்.

உத்தேசமின்றிச் சென்றுகொண் டிருந்த அவள் போன ஊர்களுக்கும் ஆலயங்களுக்கும் கணக்கு வழக்கு இல்லை. முருகன் துதி ஒரு லட்சம் ஆவர்த்திக்கு மேல் தாண்டியபோது அவளது சாரீரத்திலே, சங்கீதத் திறமையிலே ஒரு நூதன அம்சம் ஏற்பட்டிருந்தது அவளுக்கே தெரிந்தது?'

'இனிமேல் எதற்கு' என்று அவள் மனம் அலுத்துக் கொண்டது. அந்தச் சாரீரத்தில், சங்கீதத்தில் ஏற்பட்டிருந்த தெய்விக சக்தி - முருகனின் திருவருளால் ஏற்பட்டிருந்த மோகன சக்தி - தெய்வ சிருஷ்டிக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அதுவரைக்கும் நூற்றுக் கணக்கிலே கூடி அவளது பாடல்களைக் கேட்டுப் பரவசப்பட்ட ஜனங்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் பெருகிற்று. அதுவரைக்கும் பழைய பாடல்களையே பாடி ஆனந்தித்த நவநீதத்துக்குத் தெய்வ கிருபையால் நினைத்ததும் புதுப்பாடல்களைக் கவனம் செய்யும் திறமையும் கிடைத்துவிட்டது.

பக்தியால் எழுந்த ஆனந்தம் நவநீதத்தின் உள்ளத்தில் நிரம்பிற்று.

12. லட்சியம்

நவநீதம் தேசாந்தரியாகப் புறப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. எங்கெங்கோ சுற்றி அலைந்த அவள் கோவையைச் சமீபித்து ஒரு கோவிலில் பாடிக் கொண்டிருக்கையில் அவளையும் அறியாமலே கண்களில் நீர் சுரந்தது. ஏதேதோ பழைய நினைவுகளால் வதையுண்டாள். அந்த எண்ணங்களை அவள் என்னதான் முயன்றும் உதறித் தள்ள முடியவில்லை. பாடி முடிந்து அந்தக் கோவிலை விட்டுப் புறப்பட்டபோது ஒரு மனிதர் அவளைச் சமீபித்து வணங்கினர்; மரியாதையுடன் பேசினர்:

"அம்மா! உங்களை எங்கள் எஜமான் பார்க்க விரும்புகிறார்."

"உங்கள் எஜமான் என்றால்?"

"சிவநகர் மகாராஜா. நீங்கள் கூடக் கேள்விப் பட்டிருக்கலாமே!"

"சிவநகர் மகாராஜா, சிவநகர் மகாராஜா!" என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள் நவநீதம். அந்தப் பெயரை எங்கோ எப்போதோ கேள்விப்பட்டதாக ஒரு ஞாபகம். "சிவநகர் ஜமீன்தாரா?" என்றாள்.

"ஆமாம். மகாராஜா என்று நாங்கள் எல்லாம் சொல்வது வழக்கம்."

"அவர் எதற்காக என்னைக் காண விரும்புகிறார்?"

"அவருக்குச் சங்கீதந்தான் உயிர்."

"இருக்கலாம். ஆனால் நான் கோவில்களிலே பாடித் திரியும் பரதேசி. என் பாட்டெல்லாம் பரமனுக்குத்தான்."

"உண்மைதான், ஆனால் உடல் வசதி இருந்தால் ஜமீன்தார் இங்கேயே வந்து உங்கள் பாட்டைக் கேட்கத் தயங்க மாட்டார். அவர் படுக்கையில் கிடக்கிறார்; அந்திய காலம். உங்கள் சங்கீதத்தைப்பற்றிக் கேள்விப்பட்டது முதல் அதை நேரில் கேட்டு ஆனந்திக்க வேண்டும் என்கிற அவாவினால் துடிக்கிறார். பணத்தைக் கொண்டு செய்து முடிக்கிற காரியமாக இது இல்லாததால் உங்களிடம் பணிந்து கேட்கச் சொன்னார்."

நவநீதத்தின் யோசனை எங்கோ சென்றது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல், "சரி புறப்படுங்கள்" என்றாள்.

கோவிலுக்கு வெளியே ஜமீன் வண்டி இருந்தது. இருவரும் அதில் அமர்ந்து அரண்மனைக்குச் சென்றனர்.

"உங்களைப்பற்றியும் உங்கள் சங்கீத அபிமானத்தைப் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னுடைய கொள்கைக்கு விரோதமாக நான் உங்கள் அபிலாஷையைப் பூர்த்தி செய்து வைக்கிறேன். ஆனால் வெறுமனே செய்யப் போவதில்லை. என் சங்கீதத்துக்காக நீங்கள் ஆயிரத்து ஒரு ரூபாய் சம்மானம் அளிக்க வேண்டும்" என்று புன்சிரிப்புடன் ஜமீன்தாரிடம் கூறினாள் நவநீதம்.

ஜமீன்தார் உளம் மகிழ்ந்தார். உடனேயே அவள் கேட்ட தொகையைக் கொடுக்க உத்தரவிட்டார். ஆனால் அப்படிப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை நவநீதம். மறு நாள் மாலை அரண்மனையில் நவநீதத்தின் கச்சேரி என்று

பிரகடனம் செய்யச் சொன்னாள். உயர்தரமான பக்க வாத்தியங்களையும் தருவிக்க ஏற்பாடு பண்ணச் சொன்னாள். அவளது உத்தேசத்தை ஜமீன்தாரால் ஊகிக்க முடியவில்லை.

பலமான ஏற்பாடுகள். நவநீதத்தின் விருப்பப்படி அரண்மனை வாசிகள், சிப்பந்திகள் தவிர வெளி ஜனங்களையும் கச்சேரியைக் கேட்க அநுமதித்தார் ஜமீன்தார்.

அரண்மனையில் கச்சேரி நடந்தது. நவநீதம் பாடினாள். ஆனால் அவள்தான் பாடுகிறாளா, அவள் மூலம் மாயமாய் மறைந்திருந்து கலைவாணியேதான் பாடுகிறாளா என்று கேட்பவர் பரவசமுற்றனர்.

கச்சேரி முடிந்தது. ஜமீன்தார் ஆனந்தமுற்றவராய்த் தள்ளாடி எழுந்து வந்து தம் கையாலேயே அவளுக்கு ரூபாய் ஆயிரத்தொன்று சம்மானம் அளித்து அவளைப் பாராட்டிப் பேசினார்.

"... ....நீயோ வாழ்க்கையை உதறித் தள்ளிய துறவி. நேற்று வரையில் ஊர் ஊராகத் திரிந்து கோவில் தோறும் பாடிக் கொண்டிருந்தவள். மனசு வைத்திருந்தால் ஆயிரமென்ன, லட்சம் லட்சமாய்ப் பொருள் சேர்த்திருக்கலாம். நீ அப்படிச் செய்யவில்லை. நான் விரும்பிக் கேட்ட போது ஆயிரத்தொரு ரூபாய் வேண்டும் என்றாய். அதன் தாத்பரியத்தைப் பற்றி நான் எவ்வளவு யோசித்தும் ஒன்றுமே தட்டுப்படவில்லை. புராணங்களிலே கூறப்படும் ஈசுவர சோதனைகளைப் போலவே இருக்கிறது, இந்தச் செய்கை. எப்படி இருந்தால் என்ன? என் ஆயுளில் எத்தனையோ பேர்களுடைய சங்கீதத்தைக் கேட்டுவிட்டேன். இப்படிப்பட்ட நாதமும், இசையும் கேட்டதே இல்லை. இனி மேலும் கேட்பது துர்லபம். ஆகவே இதற்கு ஈடாக

என் ஜமீன் மட்டும் அல்ல, இந்த உலகத்தையே சம்மானித்தாலும் போதாது. இதோ, சொன்னபடி ரூபாய். உன்னுடைய லட்சியத்தை என்னால் உணர முடியவில்லை. உலக வாழ்வைத் துறந்த நீ இதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாயோ தெரியாது. என்னால் ஆகக் கூடியது இன்னும் ஏதாவது இருந்தாலும் கூசாமல் தெரிவிக்கலாம். நான் செய்து தரச் சித்தமாக இருக்கிறேன்'' என்று கூறி நிறுத்தினார்.

சம்மானத்தை இரு கைகளாலும் பெற்றுக் கண்களில் ஒத்திக்கொண்ட நவநீதம் எழுந்து நின்று பின்வரும் வார்த்தைகளைக் கூறினாள்.

"ஜமீன்தார் அவர்களின் கலையன்பு மிகமிகப் போற்றத்தக்கது. இவர் இன்னும் வெகுகாலம் வாழ்ந்து, கலைக்கு ஆதரவு தர ஆண்டவனை வேண்டுகிறேன். ஜமீன்தார் அவர்களின் பரம்பரையிலே வருபவர் அனைவரும் கலையைப் போஷிப்பவர்களாக இருக்க இறைவனை இறைஞ்சுகிறேன். ஜமீன்தார் அவர்கள் அபிப்பிராயப்பட்டது முற்றும் சரியே. எனக்கு ஒரு லட்சியம் உண்டு. இசை பயில விரும்பும் ஏழைப் பெண்களுக்கு ஒரு தர்மஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அந்த லட்சியம். அது ஜமீன்தார் அவர்களுக்கு ஒரு பிரமாதச் செயல் அல்ல. என் கோரிக்கையை அங்கீகரித்து நிறைவேற்றிவைக்க வேண்டுகிறேன்."

நவநீதத்தின் வேண்டுகோள் ஜமீன்தார்முதல் சகல மானவர்களுக்கும் பெரிதும் மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. உடனே ஜமீன்தார் கட்டளையைப் பிறப்பிக்கலானார்.

நவநீதத்தின் விருப்பப்படியே அருகில் உள்ள பூவிருந்தநல்லூரில் பிரம்மாண்டமான கட்டிடம் எழும்பத் தொடங்கியது.

13. கீதாலயம்

நவநீதம் தனது தேச சஞ்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத் தர்ம ஸ்தாபன கைங்கரியத்தில் ஈடுபட்டாள். ஸ்தாபனக் கட்டிடம் உள்ள இடத்திற்கு அருகிலேயே அவளுக்கும் ஒரு விடுதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்தத் தர்மஸ்தாபன விஷயம் நாடெங்கும் பரவிற்று. இசைக் கலையில் வல்ல பெண்மணிகளில் பலர் வந்து நவநீதத்தைப் பார்த்தனர். வாய்ப்பாட்டிலும், வாத்தியங்களிலும் வல்ல பெண்மணிகளை ஆசிரியைகளாகத் தேர்ந்தெடுத்தாள் நவநீதம்.

கட்டிடம் பூர்த்தி பெறுவதற்குள்ளாகவே சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் சேர்ந்துவிட்டனர். எங்கிருந்தெல்லாமோ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்த வண்ணம் இருந்தனர். உணவு, உடை, கலை எல்லாம்; யாருக்குத் தான் கிட்டும்? ஒரு பைசாச் செலவின்றி ஐந்து வருஷத்தில் இசைக் கலையில் தேர்ச்சி—யார்தான் பின்வாங்குவர்? பணியாளர் முதல் சகலமும் மாதர் மயம்—ஏன்தான் பெற்றோர் தயங்குவர்? போட்டியிட்டுக்கொண்டு வந்தனர்.

ஒரு நாள் காலை; பத்து வயதில் ஒரு பெண்ணையும் பதின்மூன்று வயதில் ஒரு பெண்ணையும் அழைத்துக் கொண்டு,லொக்குலொக்கென்று இருமிய வண்ணம் கிழவர் ஒருவர் நவநீதத்தினிடம் வந்தார். வந்தவர் பேசாமல் குழந்தைகளை அவளிடம் ஒப்படைத்துச் செல்லாமல் தம் பெருமைகளை அளந்தார்.

''...இந்த ரெண்டு பெண்களும் என் பெண்கள்தான். சங்கீதமணி சொர்ணப்பிரபா என்று கேள்விப்பட்டிருக்கலாமே! அவள் என் மூத்த மகள்தான். கச்சேரி பண்ணி ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கறு. அவ மனசு வச்சு இதுகளை முன்னுக்குக் கொண்டுவரதுன்னு கொண்டு வரலாம்; ஆனு, யாரோ ஒரு தடியனேடே கூடிக்கிட்டுப் பட்டணத்தைப் பார்க்கப் போயிட்டா. ஆயிரம் பாடுபட்ட எங்களைத் திரும்பிக்கூடப் பார்க்கறதில்லே. நாங்க கஞ்சிக்குத் தாளம் போடறேம். இந்த நிலைமையிலே இதுகளுக்கு என்னத்தைக் கண்திறந்து விடறது? ஏதோ.......உங்க புண்ணியம்'' என்றார்.

நவநீதம் அந்தக் கிழவரைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டிருந்தாள்; என்றாலும் காட்டிக்கொள்ளவில்லை. குழந்தைகளின் பெயரைப் பதிவு செய்துகொண்டாள்.

கிழவர் சென்றார். மாலையில் ஒரு பெண்மணி வந்தாள். அந்தக் குழந்தைகளின் தாய் என்று சொல்லிக்கொண்டாள். கிழவரைவிட அதிகமாகவே அளந்தாள் அவள், ஸ்வர்ணப்ரபாவின் பிரதாபங்களைப்பற்றி.

நவநீதம் பெருமூச்செறிந்தாள்.

14. பணி

கட்டிடம் பூர்த்தி பெற்றது. அந்த நூதனச் செய லால்தானே என்னவோ ஜமீன்தாரின் உடல் பூர்ண குணம் பெற்றது. திறப்புவிழா அவர் கையாலேதான் நடை பெற்றது. "சீதம்மாள் கீதாலயம்" என்கிற போர்டு கட்டி டத்தின் சிகரத்திலே நின்று புன்முறுவல் பூத்தது.

திறப்புவிழாவின்போது நவநீதம் சில வார்த்தைகள் பேசினுள். அந்தச் சில வார்த்தைகளிலே தனது சரிதம் முழுதையும் சுருக்கிக் கூறினுள். பிறப்பு வளர்ப்பு, சங்கீதம் பயிலப் பட்ட கஷ்டம், தாயின் மறைவு, அவள் பிரதிக்ஞை —இவைகளைக் கேட்டபோது பூவிருந்தநல்லூர் வாசிகள் அனைவரும் 'ஆ! ஆ!' என்று ஆச்சரியப்பட்டனர். சிவநகர் ஜமீன்தாரின் கடைக்கண் பார்வை, எங்கோ ஒரு மூலையில் எலும்புக் கூடாக உட்கார்ந்து காசநோயின் கஷ்டம் தாளாமல், லொக்கு லொக்கென்று இருமிக்கொண்டிருந்த பொன்னுசாமி பிள்ளையின் மீதும், திறந்த வாய் மூடாமல் ஆச்சரியமே வடிவமாய் மற்ருெரு மூலையில் இருந்த அந்தப் 'பாக்கியவதி'யின்மீதும் மாறி மாறி விழுந்தது.

விழா முடிந்து வீடு சென்றதும் பொன்னுசாமி பிள்ளையும் 'பாக்கியவதி'யும் நவநீதத்தினிடம் சென்று மன் னிப்புக் கோரினர். இனி என்ன?

ஸ்தாபனம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆயிரரூபாய்க் கச்சேரி செய்து அன்னையின் பிரதிக்ஞையை நிறைவேற்றி வைத்ததுடன், தான் அந்த நாளிலே இசை

பயிலப் படாத பாடு பட்டபோது உள்ளத்தில் தோன்றிய அபிலாஷையையும் பூர்த்தி செய்துகொண்ட ஒரு தனி ஆனந்தத்தோடு பரம நிம்மதியுடனே சிறுமிகளுக்குப் பணிபுரிந்து கொண்டிருந்தாள் நவநீதம்.

முற்றும்

புதிய வெளியீடுகள்

மறுமலர்ச்சி: "மாயாவி" கிளேஸ் பதிப்பு 7-0-0
மலிவுப் பதிப்பு 5-8-0

இந்த நாவலில் வாழ்க்கையின் மேடு பள்ளங்களும் சிக்கல்களும் கலைத்திறமையுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஒரே ஒரு வார்த்தை: "அநுத்தமா" 5-8-0

இந்த நாவலை அழகான பாத்திர வருணனை என்று சொல்லலாம். கதாநாயகியான சரோஜாவின் உள்ளக் கிளர்ச்சிகளையும் அநுபவத்தையும் சித்திரிப்பது இது.

துணைவி: "அகிலன்" 2-0-0

இந்த நாவலில் வரும் கல்யாணியின் எழில் நம் சிந்தையைச் சிறை செய்கின்றது. ஆசிரியரின் உரை நடையில் உணர்ச்சி ததும்புகிறது.

கதையும் கற்பனையும்: "மாயாவி" 1-8-0

கதையின் சுவாரஸ்யம் மேலும் மேலும் வளர்ந்து ஆரம்பத்தில் பிடித்த ஓட்டம் கடைசியில் வந்துதான் நிற்கும்படி செய்கிறது.

கலைச் செல்வி: கி. வா. ஜ. 2-0-0

சிறப்பான ஆறு கதைகள் அடங்கிய தொகுதி இது. ஆறும் ஆறு ரத்தினங்கள் எனின் மிகையாகாது.

கஞ்சியிலும் இன்பம்: கி. வா. ஜ. 1-8-0

பல அரிய கட்டுரைகளும், நாடோடிப் பாடல்களும் கொண்ட சிறந்த நூல் இது.

எல்லாம் தமிழ்: கி. வா. ஜ. 1-8-0

புலமையைப் போற்றித் தமிழர் வாழ்ந்ததற்கு ஆயிரம் கதைகள் சாட்சி சொல்லுகின்றன. அத்தகைய கதைகள் சில இந்தப் புத்தகத்தில் உள்ளன.

விடுதலை: த. நா. குமாரஸ்வாமி. 1-8-0

ஸ்ரீ குமாரஸ்வாமியின் முதல்நாவல் இது; சிறியதாக இருந்தாலும் இவருக்கெனவே அமைந்த பண்பை இதில் காணலாம்.

பூவின் சிரிப்பு: பெ. தூரன். 1-8-0

பூவின் சிரிப்பையும், குறட்டையின் தொந்தரவையும், சேரி விளையாட்டின் அமைதியையும் இவை போன்ற வேறு விஷயங்களையும் இனிக்க இனிக்கச் சொல்லும் கட்டுரைகள்.

இரு நண்பர்கள்: 'சுதர்சன்' 2-0-0

(மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்)

நட்பு தியாகத்தின்மேல் நிற்பது. தியாகம் மனித வாழ்க்கையில் எந்த அளவுவரைக்கும் செல்வதென்பதற்கு வரையறை இல்லை. இதற்கு வித்தியாசங்கரின் கதையே உதாரணம்.

எட்டையபுரத் தேவன்: ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன். 0-4-0

சின்னச் சின்ன ஊரிலே பெரிய பெரிய வீரச் செயல்களை விளைத்த ஆண்மையாளர் பலர் தமிழ் நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள். நம் நாட்டின் விரிந்த சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் நன்றாக வளர்ந்தால், அந்த வீரர்களின் சரித்திரத்தைத் தேடி, நாடி, ஓடி வாசிப்போம். இதோ, இது ஒரு வீரன் கதை; கர்ண பரம்பரையாக வழங்கும் கதை.

கீரையோ கீரை: ச. கு. கணபதி ஐயர் 0-4-0

நம்மிடையே பழக்கத்தில் உள்ள கீரைவகைகள் பல. அவற்றின் உபயோகங்களையும் பலன்களையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது இச் சிறு புத்தகம்.

ஆசை முகம்: 'எல்லார்வி' கிளேஸ் பதிப்பு 0-12-0

மலிவுப் பதிப்பு 0-8-0

ஆசை முகம், லட்சியம், குற்றமுள்ளநெஞ்சு, வெள்ளைப் பசு, தெளிவு ஆகிய ஐந்து கதைகள் கொண்ட தொகுதி இது. ஒவ்வொன்றும் உள்ளத்தைத் தொடும் கற்பனைச் சித்திரம்!

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை, :: சென்னை - 18.